தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

10.01.2013 A.M

## டெல்டா விவசாயிகளின் நஷ்டத்தை அரசு ஈடு செய்யும்: முதல்வர்

டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு என்ன நஷ்டம் ஏற்பட்டாலும் அது முழுவதையும் தமிழக அரசு ஈடு செய்யுமென முதல்வர் ஜெயலலிதா பேசினார்.

கொடநாடு கூட்டுறவு நியாயவிலைக் கடையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு சிறப்பு பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் திட்டத்தை புதன்கிழமை தொடங்கி வைத்து, முதல்வர் பேசியது:

"எல்லோரும், எல்லாமும் பெற வேண்டும்; இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்' என்பதுதான் அதிமுக அரசின் கொள்கை. பொங்கல் திருநாள் நெருங்கும் சூழலில், தமிழக மக்களுக்கு எவ்விதமான குறையும் இருக்கக் கூடாது என்பதுதான் இந் நிகழ்ச்சியின் நோக்கம்.

பருவமழை பொய்த்துவிட்டதால், காவிரி டெல்டா மாவட்டங்களில் உள்ள பயிர்கள் பிழைக்குமா, தப்புமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. நமக்கு கிடைக்க வேண்டிய காவிரி நீரை கர்நாடக அரசு திறந்துவிடவில்லை. காவிரி நடுவர் மன்றத்தின் இறுதி தீர்ப்பை அரசிதழில் வெளியிட வேண்டுமென எவ்வளவு வற்புறுத்தினாலும், அதுதொடர்பான நடவடிக்கையை மத்திய அரசு மேற்கொள்ளவில்லை. அதனால் காவிரியில் நமக்கு கிடைக்க வேண்டிய உரிமையும், காவிரி நீரில் நமக்கு கிடைக்க வேண்டிய பங்கும் உறுதி செய்யப்படவில்லை.

இருப்பினும், டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு ஒரு நிவாரண தொகுப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, விவசாயிகளுக்கு என்ன நஷ்டம் ஏற்பட்டாலும், அது முழுவதையும் தமிழக அரசு ஈடு செய்யுமென ஏற்கெனவே உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. எந்தெந்த பகுதிகளை வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டும்; எந்த அளவிற்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் என்பதை முடிவு செய்ய நிதியமைச்சர் பன்னீர்செல்வம் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இக் குழு, தனது ஆய்வை மேற்கொண்டு, அறிக்கையை சமர்ப்பிக்கும் முன்னரே பொங்கல் பண்டிகை வந்து விடுமென்பதால், பொங்கல் திருநாளை தமிழக மக்கள் மகிழ்ச்சியோடு கொண்டாட வேண்டுமென்பதற்காக பொதுவிநியோகத் திட்டத்தின்கீழ் 1.84 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கும் தலா ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை ஆகியவற்றுடன் ரூ.100 ரொக்கம் என ரூ.160 மதிப்பிலான பொங்கல் பரிசுகளுடன் விலையில்லா சேலை, வேஷ்டியும் வழங்கப்படுகின்றன.

இதனால் தமிழக மக்கள் எந்த குறையுமில்லாமல் மகிழ்ச்சியுடன் பொங்கலை கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கொடநாட்டிலுள்ள நியாய விலைக்கடையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் சிறப்பு தொகுப்பு வழங்கப்படும் அதே நேரத்தில், தமிழகத்திலுள்ள 1.84 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கும் சிறப்பு பொங்கல் தொகுப்பு பரிசு அளிக்கப்படும். வரும் 13-ஆம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) விடுமுறையாக இருந்தாலும், அன்றும் அனைத்து நியாயவிலைக் கடைகளும் திறந்திருக்கும் என்றார்.

இறுதியாக, தமிழக மக்களுக்கு தனது புத்தாண்டு, பொங்கல் வாழ்த்துகளையும் முதல்வர் தெரிவித்துக் கொண்டார்.

தலைமைச் செயலர் ஷீலா பாலகிருஷ்ணன், சட்டப்பேரவை துணைத் தலைவர் பொள்ளாச்சி ஜெயராமன், அமைச்சர்கள் ஓ.பன்னீர்செல்வம், நத்தம் விஸ்வநாதன், கே.பி.முனுசாமி, வைத்திலிங்கம், செல்லூர் ராஜூ, காமராஜ், சுந்தரராஜ், செந்தில் பாலாஜி, முக்கூர் சுப்பிரமணியம், எடப்பாடி பழனிச்சாமி, பி.தங்கமணி, கே.வி.ராமலிங்கம், கோகுல இந்திரா, அதிமுக அமைப்புச் செயலர் ஏ.கே.செல்வராஜ், அதிமுக மாநில சிறுபான்மைப் பிரிவு துணைச் செயலர் அ.மில்லர், உதகை சட்டப்பேரவை உறுப்பினர் புத்திசந்திரன், நீலகிரி மாவட்ட அதிமுக செயலர் கே.ஆர்.அர்ஜுனன் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியில் கொடநாடு நியாயவிலைக் கடைக்குள்பட்ட 16 பயனாளிகளுக்கு பொங்கல் தொகுப்பு பரிசுகளை முதல்வர் வழங்கினார். அதன் பிறகு, பயனாளிகள் அமர்ந்திருந்த இடத்திற்கே அனைத்து அமைச்சர்களும் சென்று பொங்கல் தொகுப்பு பரிசுகளை வழங்கினர்.

முன்னதாக, கூட்டுறவு மற்றும் உணவுத் துறைச் செயலர் எம்.பி.நிர்மலா வரவேற்றார். முடிவில், நீலகிரி ஆட்சியர் அர்ச்சனா பட்நாயக் நன்றி கூறினார்.

முதல்வர் பங்கேற்ற நிகழ்ச்சிக்காக கொடநாடு பகுதியில் கோவை மேற்கு மண்டல காவல்துறை தலைவர் சுந்தரமூர்த்தி தலைமையில் நீலகிரி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் எஸ்.நிசாமுதீன், கோவை மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் உமா, பாதுகாப்புப் பிரிவு காவல் கண்காணிப்பாளர் முத்துசாமி ஆகியோர் தலைமையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## டெல்டா மாவட்ட வறட்சி ஆய்வுக்கான உயர்நிலைக் குழு இன்று நாகை வருகை

காவிரி டெல்டா மாவட்டங்களில் வறட்சியால் ஏற்பட்டுள்ள வேளாண் பாதிப்புகளை ஆய்வு செய்ய தமிழக அரசு அறிவித்துள்ள உயர் நிலைக் குழுவினர் வியாழக்கிழமை (ஜனவரி 10) நாகை மாவட்டத்தில் ஆய்வு மேற்கொள்கின்றனர்.

தமிழக நிதியமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் தலைமையில், மின் துறை அமைச்சர் நத்தம் விஸ்வநாதன், நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் கே.பி. முனுசாமி,

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் ஆர். வைத்திலிங்கம், வேளாண்மைத் துறை அமைச்சர் எஸ். தாமோதரன், மீன்வளத் துறை அமைச்சர் கே.ஏ. ஜெயபால் ஆகியோரடங்கிய குழுவினர் வியாழக்கிழமை நாகையில் ஆய்வு செய்கின்றனர்.

வருவாய்த் துறை நிர்வாக ஆணையர், கூடுதல் தலைமைச் செயலர் டி.எஸ். ஸ்ரீதர், வேளாண் துறை ஆணையர் சிவ்தாஸ் மீனா, மீன்வளத் துறை இயக்குநர் ச. முனியநாதன் உள்பட 13 உயர் அலுவலர்களும் இக்குழுவில் பங்கேற்று, ஆய்வு மேற்கொள்கின்றனர்.

மயிலாடுதுறையிலிருந்து ஆய்வைத் தொடங்கும் இக்குழுவினர், தரங்கம்பாடி வட்டத்துக்குள்பட்ட காழியப்பநல்லூர், தரங்கம்பாடி, நாகை வட்டத்துக்குள்பட்ட தெத்தி, திருக்குவளை அருகேயுள்ள ஈசனூர், தலைஞாயிறு அருகே உள்ள ஆலங்குடி, மணக்குடி, வேதாரண்யம் அருகே உள்ள வாய்மேடு மேற்கு உள்ளிட்ட பகுதிகளில் ஆய்வு செய்கின்றனர்.

## இறைச்சிக்காகத் திருடப்படும் கறவை மாடுகள்



காஞ்சிபுரம் மற்றும் சுற்றுப்பகுதி கிராமங்களில் இறைச்சிக்காக கறவை மாடுகள் அதிக அளவில் திருடப்படுவதால் விவசாயிகள் மற்றும் மாடுகளின் உரிமையாளர்கள் அச்சமடைந்துள்ளனர்.

காஞ்சிபுரத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் தறி, விவசாயம் ஆகிய தொழிலுக்கு அடுத்து கறவை மாடுகள் வளப்பு அதிக அளவில் உள்ளது. மேலும் தமிழக அரசின் விலையில்லா கறவை மாடுகளும் அதிக அளவில் வழங்கப்பட்டுள்ளன.

இதனால் இப்பகுதி மக்கள் அதிக அளவில் பால் உற்பத்தி செய்து வருகின்றனர். சிலர் தங்களது சொந்தப் பயன்பாட்டுக்காக மாடுகள் வளர்த்து வருகின்றனர். காஞ்சிபுரம்- அரக்கோணம் சாலையில் கம்மாவார்பாளையம், படுநெல்லி, புல்லலூர்,

கணபதிபுரம், கோவிந்தவாடி அகரம் உள்ளிட்ட ஏராளாமான கிராமங்களில் அதிக அளவில் சாதாரண கறவை மாடுகள் முதல் விலையுர்ந்த கலப்பின கறவை மாடுகள் வரை வளர்த்து வருகின்றனர்.

இப்பகுதிகளில் கடந்த பல மாதங்களாக கறவை மாடுகள் திருட்டு அதிகரித்து வருகிறது. இவ்வாறு திருடப்படும் கறவை மாடுகளை காஞ்சிபுரம்- அரக்கோணம் ரயில்வே பாதைக்கு அருகில் வைத்து வெட்டி, கழிவுகளை அங்கேயே விட்டு விட்டு இறைச்சியை மட்டும் கடத்திச் சென்று விடுகின்றனர்.

இந்த இறைச்சி சென்னைக்கு அதிக அளவில் கடத்தப்படுவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர். இது குறித்து காஞ்சிபுரம் அறம் வளத்தீஸ்வரர் கோயில் தெருவைச் சேர்ந்த செவிலிமேடு கிராம நிர்வாக அலுவலர் ஜெகதீசன் கூறியது: நாங்கள் காஞ்சிபுரத்தை அடுத்த அரக்கோணம் சாலையில் கம்மாவார்பாளையத்தில் கறவை மாடுகள் வளர்த்து வருகிறோம். 3 கறவை மாடுகள், 5 கன்றுகள் இருந்தன.

இந்நிலையில் கடந்த டிசம்பர் 31-ம் தேதி இரவு கன்று ஈன்ற 27 நாளே ஆன கறவை மாடு, கன்று ஈன்று 3 மாதம் ஆன கறவை மாடு ஒன்று என இரு கறவை மாடுகளைக் காணவில்லை.

அக்கம் பக்கம் முழுவதும் தேடிப்பார்த்த போது, காஞ்சிபுரம்- அரக்கோணம் ரயில்வே பாதைக்கு அருகில் மாட்டை வெட்டி, கழிவுகளை போட்டு விட்டு சென்றுள்ளது தெரிய வந்தது.

இப்பகுதிகளில் ஏராளமான மாடுகள் இதே போன்று இறைச்சிக்காகத் திருடப்பட்டுள்ளது. இது குறித்து காஞ்சிபுரம் தாலுகா போலீஸில் புகார் செய்துள்ளேன் என்றார்.

இறைச்சிக்காகக் கறவை மாடுகளை திருடும் கும்பலை போலீஸார் விரைவில் கைது செய்ய வேண்டும் என்று கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## வேதாரண்யத்தில் 170 மி.மீ. மழை

குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை குமரிக் கடல் பகுதியில் நிலை கொண்டுள்ளதால் தென் தமிழகத்தில் மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கடந்த சில வாரங்களுக்கு முன்பு அந்தமான் கடல் பகுதியில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை, இப்போது குமரிக் கடல் பகுதியில் நிலை கொண்டுள்ளது. இது குறித்து வானிலை

ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை குமரிக் கடலில் நிலை கொண்டுள்ளது. இதன் காரணமாக புதன்கிழமை மழை பெய்தது.

மேலும் தென் தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், வடதமிழகம் மற்றும் புதுவையில் ஓரிரு இடங்களிலும் மழை பெய்ய வாய்ப்புள்ளது, என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

வானிலை முன்னறிவிப்பு: தென் தமிழகத்தின் ஒருசில இடங்களில் வியாழக்கிழமை மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது. வடதமிழகம் மற்றும் புதுவையில் ஆங்காங்கே மழை பெய்யும்.

சென்னையை பொருத்தவரையில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும்..

புதன்கிழமை காலை நிலவரப்படி தமிழகத்தில் பதிவான மழை (மில்லி மீட்டரில்): வேதாரண்யம் - 170, முத்துப்பேட்டை, பேராவூரணி, பட்டுக்கோட்டை - 50, ஆலங்குடி, அதிராமபட்டினம் - 40, புதுக்கோட்டை, தேவக்கோட்டை, அறந்தாங்கி, ராமேஸ்வரம், திருத்துறைப்பூண்டி - 30.

## பட்ஜெட்டில் வேளாண் துறைக்கு சலுகைகள் இருக்காது: சரத் பவார்



வரும் 2013-14 நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட்டில் வேளாண் துறைக்கு பெரிய அளவில் சலுகைகளை எதிர்பார்க்க முடியாது என்று மத்திய வேளாண் அமைச்சர் சரத் பவார் கூறியுள்ளார்.

இதுகுறித்து சரத் பவார் பி.டி.ஐ. செய்தி நிறுவனத்துக்கு புதன்கிழமை அளித்த பேட்டியில் கூறியதாவது: மத்திய அரசின் மானியச் செலவுகள் அதிகரித்துள்ளதால் பட்ஜெட் பற்றாக்குறை அதிகரித்துள்ளது. இதனால் பொருளாதார வளர்ச்சியும் சரிந்துள்ளது. இத்தகைய சூழ்நிலையில் வரும் மத்திய பட்ஜெட் மிகவும் கடுமையானதாக இருக்கும்.

குறிப்பாக, பயிர்க் கடன் வட்டி மேலும் குறைக்கப்படும் என எதிர்பார்க்க முடியாது. இப்போது உரிய நேரத்தில் பயிர்க் கடனைத் திருப்பிச் செலுத்துவோருக்கு வட்டியில் மானியம் அளிக்கப்படுகிறது. இதன்படி பயிர்க்கடனுக்கான வட்டி 4 சதவீதமாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

எனினும், மத்திய நிதியமைச்சகம் நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும். சொட்டு நீர்ப் பாசனம் உள்ளிட்ட நீர் சேமிப்பு திட்டங்களுக்கு பல்வேறு அமைச்சகங்களால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்பட வாய்ப்பு உள்ளது.

முறையான திட்டமிடல் இல்லாததால் பெருமளவு நீர் வீணாகிறது. நீரை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டியது அவசியம். மத்திய பட்ஜெட்டில் இதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

தேசிய உணவு பாதுகாப்பு திட்டம், தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டம் மற்றும் கிழக்கு மாநிலங்களுக்கான பசுமைப் புரட்சியைக் கொண்டுவருவது உள்ளிட்ட ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட திட்டங்களால் அரிசி, கோதுமை மற்றும் பருப்பு வகைகள் உற்பத்தி அதிகரித்துள்ளது என்றார் பவார்.

### தமிழக சம்பா சாகுபடிக்கு எவ்வளவு நீர் தேவை?

தமிழகத்தின் சம்பா சாகுபடிக்காக ஜனவரி மாதத்துக்குத் தேவையான நீரின் அளவை முடிவு செய்ய காவிரி கண்காணிப்புக் குழுவின் 32-வது கூட்டம் தில்லியில் வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கூடுகிறது.

கடந்த 4-ம் தேதி உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் மத்திய நீர் வள அமைச்சகம் இந்தக் கூட்டத்தைக் கூட்டுகிறது.

மத்திய நீர்வளத் துறைச் செயலரும் காவிரி கண்காணிப்புக் குழுவின் தலைவருமான துருவ் விஜய் சிங் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் குழுவின் உறுப்பினர்களான தமிழக தலைமைச் செயலர் ஷீலா பாலகிருஷ்ணன், கர்நாடக தலைமைச் செயலர் எஸ்.வி ரங்கநாத், புதுச்சேரி, கேரளம் ஆகிய மாநிலங்களின் சார்பில் அவற்றின் நீர்வளத் துறை அதிகாரிகள் கலந்து கொள்கின்றனர்.

இதற்கு முன்பு காவிரி கண்காணிப்புக் குழுவின் கூட்டம் கடந்த ஆண்டு டிசம்பர் 7-ம் தேதி நடைபெற்றது. அப்போது ""தமிழகத்துக்கு டிசம்பர் 31-ம் தேதிவரை 12 டிஎம்சி நீரை காவிரியில்

இருந்து திறந்துவிட வேண்டும்" என்று கர்நாடக அரசுக்கு காவிரி கண்காணிப்புக் குழுத் தலைவர் துருவ் விஜய் சிங் உத்தரவிட்டது குறிப்பிடத்தக்கது.

உச்ச நீதிமன்றத்தில் கடந்த 4-ம் தேதி நடைபெற்ற விசாரணையின்போது நீதிபதிகள் டி.கே. ஜெயின், மதன் பி. லோகுர் அடங்கிய அமர்வு, ""ஜனவரி 11-ம் தேதிக்குள் காவிரி கண்காணிப்புக் குழு கூட வேண்டும். தமிழகத்துக்கு கர்நாடகம் வழங்க வேண்டிய தண்ணீர், நிலுவை நீர் எவ்வளவு என்பதையும் கர்நாடகத்தில் பாசனம் செய்யப்பட்டுள்ள பயிர்களுக்கான நீர்த் தேவை, குடிநீர்த் தேவை ஆகியவற்றை ஆராய்ந்து உரிய உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும்" என்று உத்தரவிட்டது நினைவுகூரத்தக்கது.

ஓய்வு பெறுகிறார் துருவ் விஜய் சிங்: மத்திய நீர் வளத்துறைச் செயலராகவும் காவிரி கண்காணிப்புக் குழுக் கூட்டத்தின் தலைவருமான துருவ் விஜய் சிங் ஜனவரி 31-ம் தேதி பணியில் இருந்து ஓய்வு பெறுகிறார். இதையடுத்து மத்திய பணியாளர் நலன் மற்றும் பயிற்சித் துறையின் கூடுதல் செயலராக உள்ள எஸ்.கே. சர்கார் மத்திய நீர்வளத் துறையின் புதிய செயலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## விவசாயிகள் போராட்டம் தாற்காலிகமாக நிறுத்திவைப்பு



காவிரியில் இந்த ஆண்டு போதிய தண்ணீர் வராததால், சம்பா சாகுபடி பொய்த்துள்ள நிலையில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 25 ஆயிரம் இழப்பீடு கோரி, கடந்த 3 நாள்களாக போராட்டம் நடத்தி வந்த டெல்டா மாவட்ட விவசாயிகள் புதன்கிழமை மாலை போராட்டத்தை தாற்காலிகமாக விலக்கிக் கொண்டனர்.

தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களை வறட்சி பாதித்த மாவட்டங்களாக அறிவிக்க வேண்டும். விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 25,000, விவசாயத் தொழிலாளர்களின் குடும்பத்துக்கு தலா ரூ. 10,000, உயிரிழந்த விவசாயிகளுக்கு ரூ. 10 லட்சம் நிவாரணம் வழங்க வேண்டும்

என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த திங்கள்கிழமை முதல் விவசாயிகள் போராட்டம் நடத்தி வந்தனர்.

இந் நிலையில் தஞ்சையில் காந்திஜி சாலையில் ஆற்றுப்பாலம் அருகே புதன்கிழமை சாலை மறியல் போராட்டத்தை மேற்கொண்டனர். இரவு 7 மணியளவில் இந்தப் போராட்டம் தாற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

இதுகுறித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்கத் தலைவர் பெ. சண்முகம் செய்தியாளர்களிடம் தெரிவித்தது:

டெல்டா மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள முழு இழப்பையும் தமிழக அரசு ஈடு செய்யும் என கொடநாட்டில் நடைபெற்ற பொங்கல் பரிசுப் பொருள்கள் வழங்கும் விழாவில் தமிழக முதல்வர் அறிவித்துள்ளார்.

இது, இந்தப் போராட்டத்துக்கு கிடைத்த முதல் வெற்றி. முதல்வர் அறிவித்தவாறே உடனடியாக நிவாரணங்களை வழங்க வேண்டும். அவ்வாறு வழங்காவிட்டால் பொங்கல் திருநாளுக்குப் பிறகு போராட்டம் மேற்கொள்ளப்படும். பொங்கல் தமிழர்களின் பண்பாட்டுத் திருவிழா. இதை விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள் கொண்டாடுவதைக் கருத்தில் கொண்டு இந்தப் போராட்டம் தாற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுகிறது என்றார் சண்முகம்.

திருவாரூர், நாகை, மயிலாடுதுறை பகுதிகளிலும் சாலை மறியல் நடைபெற்றது.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

10.01.2013 A.M

## சபரிமலை சீசனால் எகிறியது தேங்காய் விலை



விருதுநகர்: சபரிமலை, தைப்பூசம் சீசன் காரணமாக, தேங்காய்க்கான தேவை அதிகரித்துள்ளது. இதனால், அதன் விலை உயர்ந்துள்ளது. தமிழகம் முழுவதும் பருவ மழை பொய்த்ததால், விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது.

பாதிப்பு:நெல், கரும்பு, மக்காச்சோளம், எள் போன்ற பல்வேறு பயிர்கள் கருகியதால், விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர்.இந்நிலையில், பொள்ளாச்சி, நாகர்கோவில் பகுதிகளில், பருவ மழை தவறியது, மின்வெட்டு போன்றவற்றால் தேங்காய் உற்பத்தி சரிவடைந்து உள்ளது.இதனால், தரத்தின் அடிப்படையில் தேங்காயை விற்பனை செய்யாமல், கிலோ 15 ரூபாய் என்ற விலையில் கொள்முதல் செய்யவேண்டிய நிலையில் வியாபாரிகள் உள்ளனர்.

கார்த்திகை மாதத்திலிருந்தே சபரிமலை அய்யப்பன், பழநி,திருச்செந்தூர் முருகன் உள்ளிட்ட பல்வேறு கோவிலுக்கு, பக்தர்கள் மாலை அணிந்து நேர்த்தி கடன் செலுத்தி வருகின்றனர்.இதனால் தேங்காய்க்கு தேவை அதிகரித்து, எட்டு ரூபாய் முதல் 20 ரூபாய் வரை விற்கப்படுகிறது. ஒரு தேங்காய் இரண்டு முதல் நான்கு ரூபாய் அதிகரித்துள்ளதால், நுகர்வோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**கொள்முதல்:**தேங்காய் வியாபாரி கூறியதாவது:மழை பொய்த்ததால், எண்ணிக்கை அடிப்படையில் கொள்முதல் செய்த தேங்காயை, தற்போது, கிலோ கணக்கில் தான் வாங்க வேண்டியுள்ளது. அய்யப்ப பக்தர்களால் தேங்காய்க்கு தேவை அதிகரித்து, விலையும் உயர்ந்துள்ளது. இவ்வாறு, அவர் கூறினார்.

## கடலூர் மாவட்ட விவசாயிகளை துரத்தும் துயரம் : "தானே'விற்கு பின் விவசாயம் கடும் பாதிப்பு

கடலூர் மாவட்டத்தில் கடந்த சில ஆண்டுகளாக ஏற்பட்டு வரும் இயற்கை சீற்றம் மற்றும் சமீப காலமாக நீடித்து வரும் பலமணி நேர மின் வெட்டு காரணமாக விவசாயிகள் மீளாத் துயரில் ஆழ்ந்துள்ளனர்.

இம்மாவட்டத்தில் 80 சதவீதம் பேர் விவசாயிகள், விவசாயக் கூலிகளாக உள்ளனர்.

மாவட்டத்தில், நெல், கரும்பு, வாழை, மணிலா, மா, பலா, முந்திரி, தென்னை, மரவள்ளி, பருத்தி, உளுந்து, கொய்யா, பூச்செடிகள், காய்கறி போன்றவை பயிர் செய்யப்படுகிறது. கடந்த 15 ஆண்டுகளில் நிகழ்ந்த சுனாமி, புயல், வெள்ளம் போன்ற இயற்கை சீற்றங்களால் மாவட்ட மக்கள் பெரும் பொருளாதார இழப்புகளை சந்தித்து வருகின்றனர். கடந்த 2011ம் ஆண்டு டிசம்பர் 30ம் தேதி வீசிய ""தானே' புயலின் கோரத் தாண்டவத்தில் விவசாயிகள், மீனவர்கள், சிறு குறு தொழில் செய்வோர், வியாபாரிகள், வர்த்தகர்கள் என அனைத்து தரப்பினரும் பாதிக்கப்பட்டனர்.

இதில், ஈடுசெய்ய முடியாத இழப்பை சந்தித்தவர்கள் விவசாயிகளே. இனி இழக்க வேறொன்றும் இல்லை என்ற நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டனர். தோட்டக்கலைப் பயிர்கள் உள்ளிட்ட 3 லட்சம் ஏக்கர் விவசாயப் பயிர்கள் பாதிக்கப்பட்டன.

அதில், ஒரு லட்சம் ஏக்கர் முந்திரி, 815 ஏக்கர் மா மரங்கள், பலா 1,225, தென்னை 2,027 ஏக்கர் என நீண்ட கால பலன் தரும் ஒரு கோடி மரங்களுக்கும் மேல் அடியோடு சாய்ந்து விவசாயிகளை நிலைகுலையச் செய்தது. இப்பயிர்களை மீண்டும் பயிர் செய்து நல்ல முறையில் மகசூல் பெற குறைந்தது 10 ஆண்டுகளாகும்.

"தானே' புயலில் சாய்ந்த முந்திரிகள், தளிர் விட்டு துளிர்க்க ஆரம்பித்ததால் மீண்டும் மகசூல் தரும் என்ற நம்பிக்கையில், விவசாயிகள் அதனை வெட்டி அகற்றவில்லை. ஆனால் கடந்த ஏப்ரல், மே மாதங்களில் 10ல் ஒரு பங்குகூட முந்திரி மகசூல் தரவில்லை.

பண்ருட்டி, காடாம்புலியூர் பகுதிகளில் முந்திரியைத் தவிர வேறு பயிர்களை விவசாயம் செய்ய வேண்டும் எனில் பாசனத்திற்கு தண்ணீர் தேவை. இப்பகுதியில் 450 முதல் 600 அடி ஆழத்தில் தான் தண்ணீர் கிடைக்கும். போர்வெல் போட்டு மின் மோட்டார் அமைக்க 6 லட்சம் ரூபாய் வரை செலவாகும். வேறு வழியின்றி புயலில் சாய்ந்த முந்திரியை விவசாயிகள் வெட்டி அகற்றாமல் உள்ளனர். அதனையும் அகற்றினால் கொஞ்ச நஞ்சம் கிடைக்கும் வருவாயும் கிடைக்காது.

முந்திரியில் ஊடுபயிராக பச்சைப் பயறு, தட்டைப் பயறு, துவரை போன்றவற்றை பயிர் செய்து வந்தனர். இந்தாண்டு போதியளவு மழையும் பெய்யாததால் முந்திரி நிலங்கள் வறண்டு

ஊடுபயிரும் செய்ய முடியவில்லை.

கருகும் சம்பா நெற்பயிர்கள்

சிதம்பரம், காட்டுமன்னார்கோவிலில் அதிகளவு நெல் பயிரிடப்படுகிறது. மாவட்டத்தில் இரண்டரை லட்சம் ஏக்கர் நெல் பயிரிடும் பரப்பளவாகும். "தானே' புயலின் போது கதிர்விடும் பருவத்திலிருந்த சம்பா நெற்பயிர்கள் சேதமடைந்ததால், மகசூல் பாதித்தது. ஏக்கருக்கு 10 மூட்டை நெல் அறுவடை செய்ததே பெரிய விஷயமாக இருந்தது.

புயலைத் தொடர்ந்து மின் வெட்டு, மழை பொய்த்தது போன்ற காரணங்களால் அடுத்தடுத்து வந்த நவரை, குறுவைப் பட்டங்கள் தாமதமாகின. மேட்டூர் தண்ணீர் வர தாமதமானதால், இந்தாண்டு சம்பா நடவு ஒரு மாதத்திற்கு மேல் தாமதமானது. தற்போது கதிர் வரும் நிலையில் உள்ள சம்பா நெற்பயிர்கள் போதிய தண்ணீர் இன்றி கருகி வருகின்றன.

கடந்த 2008ம் ஆண்டு முதல் மேட்டூரிலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறப்பது தாமதமானதால், டெல்டா பகுதியில் உளுந்து சாகுபடி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தென்னையில் காய்ப்பு இல்லை

"புயலில் தோப்பிலிருந்த 30 ஆண்டு தென்னை மரங்கள் 50 சதவீதம் விழுந்தன. மீதமுள்ள மரங்களில் புயலடித்து ஓராண்டாகியும் சரியான காய்ப்பு இல்லை. அப்படியே காய்க்கும் ஓரிரு தேங்காய்களும் சிறியதாகவும், அதில் ஒருவித பூச்சித் தாக்குதலும் காணப்படுகிறது.

வாடிய வாழை விவசாயிகள்

மாவட்டத்தில் போர்வெல் பாசனம் மூலமே கரும்பு, வாழை உள்ளிட்டவை பயிர் செய்யப்படுகின்றன. மூன்று மணி நேரம் மட்டுமே மும்முனை மின்சாரம் வழங்கப்படுவதால், கரும்பு, வாழைக்குப் போதியளவு தண்ணீர் பாய்ச்ச முடியாமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர்.

"தானே' புயலில் அறுவடை செய்யும் நிலையிலிருந்த வாழை சாய்ந்து விவசாயிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தின. தொடர்ந்து இந்தாண்டு பயிர் செய்த வாழையும், இரண்டு முறை வீசிய ‹றைக் காற்றில் சேதமடைந்தன. இரண்டு ஆண்டுகளாக விவசாயம் பாதித்து வருமானம் இல்லாத நிலையில், தற்போது பகலில் 3 மணி நேரம் மட்டுமே மும்முனை மின்சாரம் வழங்கப்படுகிறது. இரவில் எப்போது வருகிறது என தெரியவில்லை. போதிய பாசனம் செய்ய முடியாமல், வயலில் ஈரப்பதமின்றி வாழைகள் கருகி வருவதால் வாழை விவசாயிகள் செய்வதறியாமல் தவித்து வருகின்றனர்.

## தூத்துக்குடி மாவட்ட விவசாயிகளுக்கு மானிய விலையில் பவர் டில்லர், நெல் அறுவடை இயந்திரம், மரம் ஏறும் கருவி

தூத்துக்குடி:தூத்துக்குடி மாவட்டத்தில் விவசாயிகளுக்கு பவர் டில்லர், மரம் ஏறும் கருவி, நெல் அறுவடை இயந்திரம் போன்றவற்றை மானிய விலையில் வழங்குவதற்கு அரசு 83 லட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. தேவைப்படுவோர் வேளாண்மை பொறியியல் துறை அலுவலர்களை அணுகி பயன் பெறலாம்.

இது குறித்து தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் ஆஷீஷ்குமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது;

தூத்துக்குடி மாவட்டத்தில் வேளாண்மை பொறியியல் துறை மூலம் விவசாயிகளுக்கு தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நடப்பு நிதியாண்டில் வேளாண் இயந்திரங்கள் வாங்குவதற்கு மானியம் வழங்க அரசாணை வந்துள்ளது. இதன்படி பொதுப்பிரிவினருக்கு வேளாண் இயந்திரங்கள் 50 சதவீத மானியத்திலும் அதிகப்பட்சமாக நெல் அறுவடை இயந்திரத்திற்கு 4 லட்ச ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது. நடப்பாண்டில் இந்த திட்டத்தின் கீழ் மக்காச்சோள அறுவடை இயந்திரம், பலவகை பயிர்கள் கதிரடிக்கும் இயந்திரம், களையெடுக்கும் இயந்திரம், விசைத்தெளிப்பான், கைத்தெளிப்பான், நேரடி நெல் விதைப்பு கருவி, தென்னை மரம் ஏறும் கருவி, வைக்கோல் கட்டும் இயந்திரம், பவர் டில்லர், நெல் அறுவடை இயந்திரம் ஆகியவை மானியத்தில் வழங்க 83 லட்சத்து 75 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின வகுப்பினருக்கு 60 சதவீத மானியத்திலும், அதிகப்பட்சமாக நெல் அறுவடை இயந்திரத்திற்கு 5 லட்சம் வரை மானியமாக வழங்கப்படுகிறது. நடப்பாண்டில் இந்த பிரிவின் கீழ் வேளாண் இயந்திரங்கள், கருவிகள் மானியத்தில் வழங்கும் பொருட்டு 32 லட்சத்து 50 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேளாண் இயந்திரமயமாக்கல் திட்டத்தின் கீழ் மானியத்தில் விவசாயிகளுக்கு பவர் டில்லர், டிராக்டர், சுழற்கலப்பை ஆகிய இயந்திரங்கள் வாங்குவதற்கு 5 லட்சத்து 15 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்து அரசாணை வந்துள்ளது.

பவர் டில்லர், டிராக்டர் ஆகியவற்றிற்கு மானியமாக 45 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. சுழற்கலப்பை வாங்குவதற்கு 20 ஆயிரம் மானியமாக வழங்கப்படுகிறது. இது தொடர்பாக விபரங்கள் பெறுவதற்கும், விண்ணப்பங்கள் பதிவு செய்வதற்கும் விவசாயிகள் கீழ்கண்ட அலுவகத்தை தொடர்பு கொள்ள வேண்டும். கோவில்பட்டி, விளாத்திகுளம், புதூர், கயத்தார், ஓட்டப்பிடாரம் பகுதியில் உள்ளவர்கள் கோவில்பட்டி வேளாண்மை பொறியியல் துறை உதவி

செயற்பொறியாளரையும், தூத்துக்குடி, கருங்குளம், ஸ்ரீவைகுண்டம் வட்டார விவசாயிகள் தூத்துக்குடி ஸ்டேட் பாங்க் காலனியில் உள்ள உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தையும், திருச்செந்தூர், உடன்குடி, ஆழ்வார்திருநகரி, சாத்தான்குளம் பகுதி விவசாயிகள் திருச்செந்தூர் உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தையும் அணுக வேண்டும்.

விவசாயிகள் தங்களது விவசாய நிலத்தினை கம்ப்யூட்டர் பட்டா, சிட்டா அடங்கல், ரேஷன்கார்டு நகல், இரண்டு பாஸ்போர்ட் சைஸ் போட்டோ ஆகிய ஆவணங்களுடன் சம்பந்தப்பட்ட அலுவலகத்திற்கு விண்ணப்பித்து அரசின் மானிய திட்டம் மூலம் பயன்பெற வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

## தீவன விலை உயர்வு: கறவை மாடு வளர்ப்பவர்கள் தவிப்பு

தம்மம்பட்டி: பால் கொள்முதல் விலை உயராத நிலையில், தீவனங்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால், கறவை மாடு வளர்க்கும் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தம்மம்பட்டி சுற்று வட்டாரத்தில், பால் உற்பத்திக்காகவும், இயற்கை உரமான சாணத்துக்காகவும் விவசாயிகள் பெரும்பாலானோர், பசு மாடுகளை வளர்த்து வருகின்றனர். பால் கறக்கும் மாடுகளை, பல ஆயிரம் ரூபாய்க்கு வாங்கும் விவசாயிகள், பசுந்தீவனத்துடன், அடர் தீவனமான தவிடு, பருத்திக்கொட்டை, கடலை புண்ணாக்கு, மரவள்ளி கழிவு (திப்பி) மற்றும், மக்காச்சோளம், அரிசி மாவு போன்றவற்றை தீவனமாக கொடுக்கின்றனர்.

இந்த ஆண்டு போதிய மழை பெய்யாததால், நிலக்கடலை, நெல் போன்றவற்றின் உற்பத்தி பெரிதும் குறைந்தது. போதிய விலை இல்லாததால் மரவள்ளியையும் அதிகளவில் விவசாயிகள் பயிரிடவில்லை. இதனால், டிசம்பர் மாதம் முதல், தீவனங்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. ஒரு கிலோ புண்ணாக்கு, 40லிருந்து, 58 ரூபாயாகவும், தவிடு மூட்டை, 400லிருந்து, 500 ரூபாயாகவும், மரவள்ளி கழிவு ஒரு கூடை, 20லிருந்து, 50 ரூபாயாகவும் உயர்ந்துவிட்டது.

ஏற்கெனவே, தனியார் பால் நிறுவனங்கள், கொள்முதல் விலையை, 18லிருந்து, 16 ரூபாயாக குறைத்து விட்டன. இந்நிலையில், தீவனங்களின் விலை உயர்வு, கறவைமாடு வைத்துள்ள விவசாயிகளுக்கு பெரும் செலவை ஏற்படுத்தி, வருவாயை குறைத்துள்ளது.

## சந்தையில் மாட்டு கயிறு விற்பனை "படுஜோர்'

அவலூர்பேட்டை : அவலூர்பேட்டை சந்தையில் மாடுகளுக்கான கயிறுகள் விற்பனை ஜோராக நடந்தது.மாட்டு பொங்கல் அன்று மாடுகளுக்கு குளிப்பாட்டி, கொம்புகளில் வண்ணம் தீட்டி,

சலங்கையுடன், புதிய கயிறு கட்டி பொட்டு வைத்து வணங்குவது வழக்கம்.
பின்னர் மாலை நேரத்தில் கிராம தெருக்களில் மாட்டுவண்டி பூட்டி, சிறுவர்கள்
பொங்கலோ, பொங்கல் என்று ஆரவாரத்துடன் ஊர்வலம்
செல்வர்.
தற்போது மாட்டு வண்டிகளின் பயன்பாடு குறைந்ததால் இந்த நடைமுறையும் நாளடைவில் மறைந்து போகும் நிலை ஏற்பட்டுள்ளது.
அவலூர்பேட்டையில் நேற்று வழக்கமாக நடந்த வாரசந்தையில் மாடுகளின் கயிறு மற்றும் பெயின்ட் விற்பனை விறுவிறுப்பாக நடந்தது.
சுற்றுப்பகுதியை சேர்ந்த விவசாயிகள் பலரும் ஆர்வத்துடன் காய்கறிகள், கயிறுகள், கோலம் போடும் வண்ண பொடிகள், கரும்பு ஆகியவற்றை வாங்கி சென்றனர்.
மாடுகளுக்கு கட்டும்
தலை கயிறு 70 முதல் 80 ரூபாய் வரையும், கை கயிறு 30 முதல் 90 வரையும், மூக்கணாங்கயிறு 20 முதல் 50 வரையிலும், நெற்றி கயிறு ஜோடி 20க்கும், மோக்கரை கயிறு 10 ரூபாய்க்கும் விற்பனையானது.விவசாயிகள் பலவித கயிறுகளையும் பொருட்களையும் தேடி பார்த்து வாங்கி சென்றன

## கடும் பனி பொழிவால் கருகும் வேப்பமர இலைகள்

கச்சிராயபாளையம் : கச்சிராயபாளையம் மற்றும் அதன் சுற்றுப்பகுதிகளில் கடும் பனிப்பொழிவின் காரணமாக சாலையோர வேப்பமரங்களின் இலைகள் காய்ந்து வருகிறது.
கச்சிராயபாளையம் மற்றும் அதனையடுத்த கிராமப்பகுதிகளுக்கு செல்லும் நெடுஞ்சாலை ஓரங்களில் அரசுக்கு சொந்தமான வேப்பமரங்கள் ஏராளமாக உள்ளன. கடந்த சில வாரங்களாக பெய்துவரும் கடும் பனிப்பொழிவை தாக்குபிடிக்க முடியாமல் வேப்ப மரங்களின் இலைகள் கருகி, காய்ந்து வருகிறது.
தண்ணீர் பிடிப்பு அருகில் உள்ள மரங்கள் மட்டும் தப்பித்து வருகிறது. பனிப்பொழிவு பகலிலும் தொடர்வதால் வெயில் மற்றும் பனிபொழிவை ஒரே நேரத்தில் தாக்குப்பிடிக்க முடியாமல், வேப்பமர இலைகள் காய்ந்து வருகின்றன.

## விழுப்புரத்தில் கறிக்கோழி வளர்ப்பு குறித்து பயிற்சி முகாம்

விழுப்புரம் : அரசு மானிய உதவியுடன் கறிக்கோழி வளர்க்க உள்ள பயனாளிகளுக்கு பயிற்சி முகாம் நடந்தது. தமிழக அரசின் கறிக்கோழிப் பண்ணை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், விழுப்புரம்

மாவட்டத்தில் கோழிப்பண்ணைகள் அமைக்க 230 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.
பண்ணை வைக்க உள்ள பயனாளிகளுக்கு கோழிப்பண்ணை பராமரிப்பு குறித்து பயிற்சி முகாம் நேற்று துவங்கியது. விழுப்புரத்தில் உள்ள கால்நடை பராமரிப்பு துறை பயிற்சி மையத்தில் நடந்த பயிற்சி முகாமில் மண்டல இணை இயக்குனர் அழகரசன் தலைமை தாங்கி, திட்டம் குறித்து விளக்கிப் பேசினார்.

கோட்ட உதவி இயக்குனர் சுந்தரராஜ், கால்நடை பல்கலை கழக பேராசிரியர் டாக்டர் வேங்கடபதி ஆகியோர், திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் பண்ணைப் பராமரிப்பு குறித்து விளக்கி பேசினார்.

இந்த திட்டத்தின் கீழ் பயனாளிக்கு 50 சதவீதம் கடன் தொகையும், மீதமுள்ள 50 சதவீதம் மத்திய, மாநில அரசுகள் மானிய தொகையினை நபார்டு மூலம் வழங்குகிறது. இந்த திட்டத்தின் கீழ் 3,000 கோழிகள் வளர்ப்போருக்கு, தலா ஒரு லட்சத்து 24 ஆயிரம் ரூபாய் மத்திய, மாநில அரசுகள் முதலீட்டு மூலதனமாக வழங்குகிறது.

விழுப்புரம் பகுதியில் தேர்வு செய்யப்பட்டுள்ள 44 பேருக்கு நேற்று முதல் பயிற்சி துவங்கியுள்ளது. தொடர்ந்து இவர்களுக்கு 5 நாட்கள் பயிற்சி வழங்கப்படுகிறது.பண்ணைகள் துவக்கிய பின் இவர்களுக்கு மானியத்துடன் கூடிய நிதி வழங்கப்பட உள்ளது.

## உரிய நேரத்தில் விதை கிடைக்காததால் வேர்க்கடலை விவசாயிகள் பாதிப்பு

மீஞ்சூர் : வேளாண் துறை மூலம், உரிய நேரத்தில் விதை பருப்பு மற்றும் ஜிப்சம் கிடைக்காததால், அதிக விலை கொடுத்து சந்தையில் இவற்றை வாங்க வேண்டிய நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டு உள்ளனர்.

மீஞ்சூர் ஒன்றியத்தில், பள்ளிப்பாளையம், உமிப்பேடு, கோளூர், கங்காணிமேடு, காட்டுகுப்பம், வாயலூர் உள்ளிட்ட ஒரு சில இடங்களில், நிலம், சவுடு மண் பரப்பாக உள்ளது. இதனால், இங்கு, வேர்க்கடலை விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது.

தற்போது, வேர்க்கடலை பயிரிடுவதற்கான பருவம் துவங்கிவிட்டது. இந்த பணிக்கு, அடி உரமாக ஜிப்சம் மற்றும் விதை பருப்பு தேவை. இதை, ஒவ்வொரு ஆண்டும், வேளாண் துறை மானிய விலையில் கொடுப்பது வழக்கம்.

ஆனால், இந்த ஆண்டு, இருப்பு இல்லை என்ற காரணத்தை கூறி, வேளாண் துறை இழுத்தடித்து வருகிறது. மார்கழி மாதம் முடிவதற்குள் பயிரிடும் பணிகளை முடிக்க வேண்டும் என்பதால், காத்திருக்க முடியாத விவசாயிகள், மூன்று முதல் நான்கு மடங்கு அதிக விலை கொடுத்து,

சந்தையில் உரம் மற்றும் விதைகளை வாங்க துவங்கி உள்ளனர். இதனால், இந்த ஆண்டு லாபம் பாதிக்கப்படும் என, அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து, மீஞ்சூர் வட்டார வேளாண் துறை அதிகாரி, ரேவதி கூறுகையில், ""மீஞ்சூர் ஒன்றியத்தில் குறைந்த அளவே வேர்க்கடலை பயிரிடப்படுகிறது. தற்போது, 250 ஏக்கர் அளவில் வேர்க்கடலை பயிரிடும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டு உள்ளனர்," என்றார். மேலும், ""கடந்த இரு தினங்களுக்கு முன்னர் தான், விதை வேர்க்கடலை வந்துள்ளது. அவற்றை உடனடியாக விவசாயிகளுக்கு விற்பனை செய்ய உள்ளோம். ஜிப்சம் ஓரிரு நாளில் வந்துவிடும். அதையும் வினியோகம் செய்து விடுவோம்," என்றார்.

இந்த தாமதத்தால், அனைவரும் ஒரே நேரத்தில், அவசரமாக பயிரிடும் சூழல் ஏற்படும். அதனால், ஆள் பற்றாக்குறை ஏற்பட்டு, நடவுக்கு அதிக செலவாகும் வாய்ப்பு உள்ளது. இதை தவிர்க்க, அடுத்த பருவத்திலாவது, உரிய நேரத்தில் விதை மற்றும் உரம் கிடைக்க செய்ய வேண்டும் என்பது, விவசாயிகளின் கோரிக்கையாக உள்ளது.

## தேயிலை விலை நிர்ணய ஆலோசனை தொழில் நிர்வாகிகளுடன் சந்திப்பு

குன்னூர் : பசுந்தேயிலைக்கு குறைந்தபட்ச விலை நிர்ணயப்பது குறித்து, இந்திய தோட்ட மேலாண் நிறுவனத்தினர்,தேயிலை தொழில் சார்ந்த சங்க நிர்வாகிகளை சந்திக்கின்றனர்.

இது குறித்து தேயிலை வாரியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

பசுந்தேயிலைக்கு குறைந்தபட்ச விலை நிர்ணயிப்பது சம்பந்தமாக சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் மீது, உயர்நீதி மன்றம் ஒரு ஆணையை பிறப்பித்தது.

இதன்படி, இந்திய தேயிலை வாரியம் உரிய நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டு, இந்திய தோட்ட மேலாண் நிறுவனத்தை நியமித்துள்ளது.

இந்த நிறுவனத்தை சார்ந்த பேராசிரியர்கள், தேயிலை தொழிலில் ஈடுபட்டுள்ள குறு, சிறு விவசாயிகள், தேயிலை தோட்ட அதிபர்கள், மாவட்ட நிர்வாகம், தொழிற்சாலை உரிமையாளர்கள், வர்த்தகர்கள் மற்றும் பல தரப்பட்ட தேயிலை தொழில் சார்ந்த சங்க நிர்வாகிகளை, 10 மற்றும் 11ம் தேதிகளில், குன்னூர் உபாசி அரங்கில் நடக்கும் கூட்டத்தில் சந்தித்து, உரிய விளக்கங்கள் பெற்று அறிக்கையினை தேயிலை வாரியத்திடம் சமர் பிக்கும். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## தூத்துக்குடி மாவட்ட விவசாயிகளுக்கு மானிய விலையில் பவர் டில்லர், நெல் அறுவடை இயந்திரம், மரம் ஏறும் கருவி

தூத்துக்குடி:தூத்துக்குடி மாவட்டத்தில் விவசாயிகளுக்கு பவர் டில்லர், மரம் ஏறும் கருவி, நெல் அறுவடை இயந்திரம் போன்றவற்றை மானிய விலையில் வழங்குவதற்கு அரசு 83 லட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. தேவைப்படுவோர் வேளாண்மை பொறியியல் துறை அலுவலர்களை அணுகி பயன் பெறலாம்.

இது குறித்து தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் ஆஷீஷ்குமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது;

தூத்துக்குடி மாவட்டத்தில் வேளாண்மை பொறியியல் துறை மூலம் விவசாயிகளுக்கு தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நடப்பு நிதியாண்டில் வேளாண் இயந்திரங்கள் வாங்குவதற்கு மானியம் வழங்க அரசாணை வந்துள்ளது. இதன்படி பொதுப்பிரிவினருக்கு வேளாண் இயந்திரங்கள் 50 சதவீத மானியத்திலும் அதிகப்பட்சமாக நெல் அறுவடை இயந்திரத்திற்கு 4 லட்ச ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது. நடப்பாண்டில் இந்த திட்டத்தின் கீழ் மக்காச்சோள அறுவடை இயந்திரம், பலவகை பயிர்கள் கதிரடிக்கும் இயந்திரம், களையெடுக்கும் இயந்திரம், விசைத்தெளிப்பான், கைத்தெளிப்பான், நேரடி நெல் விதைப்பு கருவி, தென்னை மரம் ஏறும் கருவி, வைக்கோல் கட்டும் இயந்திரம், பவர் டில்லர், நெல் அறுவடை இயந்திரம் ஆகியவை மானியத்தில் வழங்க 83 லட்சத்து 75 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின வகுப்பினருக்கு 60 சதவீத மானியத்திலும், அதிகப்பட்சமாக நெல் அறுவடை இயந்திரத்திற்கு 5 லட்சம் வரை மானியமாக வழங்கப்படுகிறது. நடப்பாண்டில் இந்த பிரிவின் கீழ் வேளாண் இயந்திரங்கள், கருவிகள் மானியத்தில் வழங்கும் பொருட்டு 32 லட்சத்து 50 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேளாண் இயந்திரமயமாக்கல் திட்டத்தின் கீழ் மானியத்தில் விவசாயிகளுக்கு பவர் டில்லர், டிராக்டர், சுழற்கலப்பை ஆகிய இயந்திரங்கள் வாங்குவதற்கு 5 லட்சத்து 15 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்து அரசாணை வந்துள்ளது.

பவர் டில்லர், டிராக்டர் ஆகியவற்றிற்கு மானியமாக 45 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. சுழற்கலப்பை வாங்குவதற்கு 20 ஆயிரம் மானியமாக வழங்கப்படுகிறது. இது தொடர்பாக விபரங்கள் பெறுவதற்கும், விண்ணப்பங்கள் பதிவு செய்வதற்கும் விவசாயிகள் கீழ்கண்ட அலுவகத்தை தொடர்பு கொள்ள வேண்டும். கோவில்பட்டி, விளாத்திகுளம், புதூர், கயத்தார், ஓட்டப்பிடாரம் பகுதியில் உள்ளவர்கள் கோவில்பட்டி வேளாண்மை பொறியியல் துறை உதவி செயற்பொறியாளரையும், தூத்துக்குடி, கருங்குளம், ஸ்ரீவைகுண்டம் வட்டார விவசாயிகள் தூத்துக்குடி ஸ்டேட் பாங்க் காலனியில் உள்ள உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தையும்,

திருச்செந்தூர், உடன்குடி, ஆழ்வார்திருநகரி, சாத்தான்குளம் பகுதி விவசாயிகள் திருச்செந்தூர் உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தையும் அணுக வேண்டும்.
விவசாயிகள் தங்களது விவசாய நிலத்தினை கம்ப்யூட்டர் பட்டா, சிட்டா அடங்கல், ரேஷன்கார்டு நகல், இரண்டு பாஸ்போர்ட் சைஸ் போட்டோ ஆகிய ஆவணங்களுடன் சம்பந்தப்பட்ட அலுவலகத்திற்கு விண்ணப்பித்து அரசின் மானிய திட்டம் மூலம் பயன்பெற வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தென்காசியில் விற்பனைக்கு குவிந்துள்ள வெளிமாவட்ட கரும்பு

தென்காசி:பொங்கல் திருநாளை முன்னிட்டு தென்காசிக்கு வெளி மாவட்டங்களிலிருந்து கரும்பு விற்பனைக்கு வந்துள்ளது.விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் இயற்கை அன்னைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் பொங்கல் பண்டிகை கொண்டாடப்பட்டு வருகிறது. வரும் 14ம் தேதி பொங்கல் கொண்டாடப்படுவதை முன்னிட்டு பொங்கல் பொருட்களின் விற்பனை சூடு பிடித்துள்ளது.பொங்கல் என்றாலே தித்திக்கும் கரும்புதான் அனைவருக்கும் ஞாபகம் வரும். இந்த கரும்பு விலை தற்போது பொதுமக்களுக்கு மலைப்பை ஏற்படுத்தியுள்ளது.தமிழகத்தில் தஞ்சாவூர், அருப்புக்கோட்டை, மதுரை, தேனி, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் அதிகளவில் கரும்பு விளைவிக்கப்படுகிறது. ஆனால் இந்த ஆண்டு பருவ மழை பொய்த்து விட்டதால் இப்பகுதியில் கரும்பு சாகுபடி வெகுவாக குறைந்துள்ளது. இதனால் இவற்றின் விலை இப்போது அதிகரித்துள்ளது.நெல்லை மாவட்டத்தில் பரவலாக கரும்பு பயிரிடப்பட்டு வருவது வழக்கம். ஆனால் இந்த ஆண்டு கரும்பு சாகுபடி நெல்லை மாவட்டத்தில் குறிப்பிடும்படியாக இல்லை.

தென்காசியில் குவிப்பு

இதன் காரணமாக வெளி மாவட்டங்களில் இருந்து கரும்பு நெல்லை மாவட்டத்திற்கு கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.தென்காசிக்கு லாரிகள் மூலம் தஞ்சாவூர், தேனி, மதுரை ஆகிய மாவட்டங்களிலிருந்தும் மற்றும் அருப்புக்கோட்டை பகுதியிலிருதும் கரும்புகள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டு குவிக்கப்பட்டுள்ளது.

கரும்பு சாகுபடி குறைந்து விட்டதாலும், வெகு தொலைவில் இருந்து கரும்பு கொண்டு வரப்படுவதாலும் அவற்றின் விலை அதிகரித்துள்ளது.

ஒரு கட்டு ரூ 400

கடந்த ஆண்டு 15 கரும்புகள் கொண்ட கட்டு ஒன்றுக்கு 150 ரூபாய் முதல் 225 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு கரும்பு கட்டு ஒன்றுக்கு 350 ரூபாய் முதல் 400 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. அதாவது ஓராண்டில் 200 ரூபாய் அதிகரித்துள்ளது. கரும்பு விலையை கேட்டதும் பொதுமக்கள் மலைத்து நிற்கின்றனர். தின்பதற்கு இனிப்பாக இருக்கும் கரும்பின் விலையோ பொதுமக்களுக்கு கசப்பதாக இருக்கிறது.

விலை அதிகரித்தாலும் பொங்கலுக்காக கரும்பு வாங்குவோரின் எண்ணிக்கை குறையவில்லை. ஆனால் அவர்கள் வாங்கும் கரும்பின் எண்ணிக்கை குறைந்துள்ளது. முன்பு சாதாரணமாக ஒரு கட்டு கரும்பு வாங்கும் நிலையில் இருந்த பலர் தற்போது 4 அல்லது 5 கரும்புகளை மட்டுமே வாங்கி செல்கின்றனர். ஒரு கரும்பு 30 ரூபாய் முதல் 35 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. கரும்பின் விலை பொங்கல் நெருங்க நெருங்க அதிகரிக்கும் வாய்ப்பு இருப்பதை மறுக்க முடியாது.

## நெற்பயிரை தாக்கும் குலையநோயை கட்டுப்படுத்தும் வழிமுறைகள்

தென்காசி:நெற்பயிரை தாக்கும் குலையநோயை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் பற்றி கீழப்பாவூர் வேளாண்மை உதவி இயக்குநர் நல்லமுத்துராசா விளக்கம் அளித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

""நெற்பயிரை தாக்கும் நோய்களில் மிகவும் விரைவாக பரவி மகசூலை பாதிக்கக்கூடியதாக குலைநோய் உள்ளது. தற்போது நடவு மேற்கொண்டுள்ள பிசான பருவ நெல் வயல்களில் குறைந்த வெப்பம், அதிக பணி, காற்றில் அதிக ஈரப்பதம் கொண்ட தட்பவெப்பநிலை நிலவுவதால் கீழப்பாவூர் வட்டாரத்தில் குலையநோய் தாக்குதல் பரவலாக காணப்படுகிறது.

குலைய நோயானது நெற்பயிரின் அனைத்து வளர்ச்சி பருவத்திலும் தாக்க கூடியது. இந்நோயின் தாக்குதல் குளிர்காலத்தில் அதிகமாக இருக்கும். இந்த நோயானது பூச்சாணத்தால் காற்றின் மூலம் பரவுகிறது. கூடுதலாக தழைச்சத்து (யூரியா) இட்ட வயல்களில் அதிகம் காணப்படுகிறது.

இந்த நோயின் அறிகுறி முதலில் இலைகளில் சிறிய கண் வடிவ புள்ளிகளாக தோன்றி நாளடைவில் பெரிய புள்ளிகளாக மாறி பின் நார்நாராக பிரியும். இலைகள் நாளடைவில் காய்ந்து விடும். பயிரின் கணுக்களில் கருநிறமாக இந்நோய் காணப்படும். நெற்பயிரின் கதிர்களுக்கு அடிப்பாகத்தில் உள்ள கணுவில் தாக்குதல் ஏற்படுவதால் நெற்கதிர் ஒடிந்து விடும்.

இந்நோயை கட்டுப்படுத்த வயலிலும், வரப்புகளிலும் உள்ள களைகளை நீக்கி சுத்தமாக வைத்திருக்க வேண்டும். பரிந்துரைக்கப்பட்ட அளவு தழைச்சத்து உரத்தை (யூரியா) பிரித்து இட வேண்டும். சூடோமோனாஸ் பிளோரசன்ஸ் என்ற நுண்ணுயிரியை ஏக்கருக்கு ஒரு கிலோ வீதம் 50 கிலோ தொழுஉரம் அல்லது மணலுடன் கலந்து நட்ட 30 நாள் கழித்து இட வேண்டும். ஒரு லிட்டர் நீரில் 2 கிராம் சூடோமோனாஸ் கலந்த கரைசலை நடவுக்கு பின் 45 நாட்கள் கழித்து 10 நாள் இடைவெளியில் மூன்று முறை இட தெளிக்கலாம்.

ஏக்கருக்கு ரசாயன பூச்சி கொல்லி மருந்துகளான எசபன்பாஸ் (கினோசான்) 200 மில்லி அல்லது கார்பன்டைசிம் 200 கிராம் அல்லது டிரைசைக்ளோசோல் (பீம்) என்ற மருந்துகளை தெளித்தும் குலைய நோயை கட்டுப்படுத்தலாம்" என வேளாண்மை உதவி இயக்குநர் நல்லமுத்துராசா அறிக்கையில் கூறியுள்ளார்.

## 5000 ஏக்கர் விவசாய பயிர்கள் பாழ்: கடன் வாங்கி பயிரிட்டும்" நோயூஸ்':விரக்தியில் விவசாயிகள்

அருப்புக்கோட்டை : விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டையில் உள்ள புளியம்பட்டி பகுதியில், 5000 ஏக்கரில் விவசாயம் செய்யப்பட்ட பயிர்கள் கருகியதால், கடன் வாங்கி பயிரிட்ட விவசாயிகள், விரக்தியில் உள்ளனர்.

மாவட்டத்திலே அருப்புக்கோட்டை புளியம்பட்டி பகுதியில்தான், 5000 ஏக்கரில் மானாவாரி விவசாயம் நடந்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் இப்பகுதி மக்கள், தங்கள் விவசாய நிலங்களில் பருத்தி, நெட்டை மற்றும் குட்டை சோளம், மல்லி, சூரியகாந்தி, குதிரைவாலி, மக்காச்சோளம், மாட்டு தீவன நாற்று போன்றவைகளை பயிரிடுவர். ஆண்டிற்கு ஒரு மழை பெய்தாலே போதும், வெள்ளாமை எடுத்து விடுவர். ஆனால், கடந்த ஆண்டு மழை பெய்யாததால், பயிர்கள் அனைத்தும், அரைகுறையாக முளைத்தும், பாதி பயிர்கள் முளை விடாமலும், ஓரளவு செடியான பயிர்கள் தண்ணீர் இல்லாததாலும், கருகி போயின.

மக்காச்சோளம் 2 ஆயிரத்து 500 ஏக்கர், குட்ட சோளம்

ஆயிரத்து 100 ஏக்கர், மல்லி 500 ஏக்கர், சூரிய காந்தி 500 ஏக்கர், குதிரைவாலி 200 ஏக்கர், பருத்தி 100 ஏக்கர், சோளநாற்று 200 ஏக்கர் என,5 ஆயிரத்து 100 ஏக்கரில் பயிர் செய்யப்பட்ட பயிர்கள், மழை இல்லாமல் கருகின. விவசாயிகள், கடன் வாங்கியும், நகைகளை அடகு வைத்தும், ஏக்கருக்கு தலா 7 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்து விவசாயம் செய்துள்ளனர். ஒவ்வொரு விவசாயிக்கும் சராசரியாக லட்சக் கணக்கில் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. காலங்காலமாக விவசாயம் செய்து வருவதால் பாதிப்பு அடைந்தவர்கள், வேறு வேலைக்கு செல்ல முடியாமல் அவதிப்படுகின்றனர்.

இப்பகுதியில் 500 க்கு மேற்பட்ட கால்நடைகளுக்கு, தீவனத்திற்கு கூட வழியில்லாத வகையில், விவசாயம் மழை இல்லாமல் பொய்த்து விட்டது.

விவசாயி தாமோதர கண்ணன்,""நான் 35 ஏக்கரில் மக்காச்சோளம், நெட்டை சோளம் பயிர்கள் பயிரிட்டு உள்ளேன். மழை இன்மையால் அனைத்தும் கருகி போனது. கடன் வாங்கி, நகைகளை அடகு வைத்து விவசாயம் செய்தும், பலன் இல்லாமல் போனது,"என்றார்.

வரதராஜ்,"" 30 ஏக்கரில்சோளம், கம்பு, நாற்று பயிரிட்டுள்ளேன். எந்த பயிரும் முளைக்கவில்லை. மாட்டுக்கு தீவனத்திற்கு கூட வழி இல்லை. அடமானத்தில் வைத்த நகைகளை திருப்பவும் வழி இல்லை, "என்றார்.

அழகர்சாமி,""90 ஏக்கர் நிலத்தை, குத்தகை எடுத்து விவசாயம் செய்து வருகிறேன். மல்லி, கம்பு, சோளம் போட்டுள்ளேன். ஒன்று கூட வரவில்லை. கடன் வாங்கி போட்ட பணமும் போய் விட்டது. குத்தகை பணமும் கொடுக்க முடியவில்லை,"என்றார்.

## மலை அபிவிருத்தி திட்டத்தில் 50 சத மானியத்தில் கிடாரி கன்றுகள்

ஸ்ரீவில்லிபுத்தூர் : மேற்கு தொடர்ச்சி மலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ், கால்நடைத்துறை சார்பில், நீர்பிடிப்பு கிராமங்களில், 50 சத மானியத்தில் கிடாரி (பெண் பசு)கன்றுகள் வழங்கப்படவுள்ளன.

இத்திட்டத்தில், வனப்பகுதியை யொட்டிய நீர்பிடிப்பு கிராமங்களை தத்தெடுத்து, பொதுப்பணி,வேளாண், தோட்டகலை, கால்நடை துறை சார்பில், அக்கிராம மக்களுக்கு வாழ்வாதாரத்தை உயர்த்தும் முயற்சியில், அரசு ஈடுபட்டு வருகிறது.

இந்தாண்டு கால்நடைத்துறை சார்பில், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், திருநெல்வேலி மாவட்டங்களில் தேர்வு செய்யப்பட்ட, நீர்ப்பிடிப்பு கிராமங்களை சேர்ந்த 10 பேருக்கு, தலா 8 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள ,கிடாரி கன்றுகள் 50 சத மானியத்தில் வழங்கப்படவுள்ளன.

மேலும், இக்கிராமங்களை சேர்ந்த 6 முதல் 8 மாதம் வரையிலான 10 கிடாரி கன்றுகளை தேர்வு செய்து, 30 மாதங்கள் வரை அதற்கான ஊட்டச்சத்து தீவனங்கள் முழு மானியத்தில் வழங்கப்பட உள்ளன. மேலும், இந்த கன்றுகளுக்கு, 50 சத மானியத்தில் காப்பீடும் செய்யப்படவுள்ளது. இதற்கான பயனாளிகள் தேர்வு நடவடிக்கையில், கால்நடை துறையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

## பிழைத்த மிளகாய் செடிகள்

இளையான்குடி : இளையான்குடியில் இரண்டு நாட்களாக பெய்த மழையால்,6 ஆயிரம் ஏக்கரில் வாடிய மிளகாய் செடி பிழைத்தது.

இளையான்குடி தாலுகாவில் 30 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த நெல் பயிர்கள் கருகியது. கண்ணமங்கலம், முனைவென்றி , சாலைக்கிராமம், சூராணம் , வடக்கு அன்டக்குடி உட்பட தாலுகா முழுவதும் 6 ஆயிரம் ஏக்கரில் மிளகாய் பயிரிடப்பட்டுள்ளது.

மழை பெய்யாததால் காய் காய்த்த நிலையில் மிளகாய் செடிகள் வாட துவங்கியது. மிளகாய்க்கு ஒரு ஏக்கருக்கு ரூபாய் 25 ஆயிரம் வரை செலவு செய்த விவசாயிகள் கவலைப்பட்டனர்.

இந்நிலையில் கடந்த இரண்டு நாட்களாக இப்பகுதியில் லேசான மழை பெய்துள்ளது. இதனால் வாடிய மிளகாய் செடிகள் காப்பாற்றப்பட்டுள்ளது.

விவசாயி தங்கராசு கூறுகையில் ,"" அடுத்த மாதம் பழம் எடுக்க உள்ள நிலையில் வாடிய செடிகளை , தற்போது பெய்த மழை காப்பாற்றியுள்ளது " என்றார்.

## ஆர்.எஸ்.மங்கலத்தில் சாரல் மழை மிளகாய் விவசாயிகள் மகிழ்ச்சி

ஆர்.எஸ்.மங்கலம் : ஆர்.எஸ்.மங்கலம் பகுதியில் சில நாட்களாக பெய்துவரும் சாரல் மழையால், மிளகாய் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

மாவட்டத்தின் நெல்களஞ்சியமான திருவாடாணை தாலுகாவில், நெல்லுக்கு அடுத்தபடியாக மிளகாய் சாகுபடி செய்யப்படுகிறது.

ஆர்.எஸ்.மங்கலம், செங்குடி, வண்டல், சேத்திடல், சீனாங்குடி, சனவேலி, உப்பூர் உட்பட சுற்றுப்புற பகுதிகளில் 2,680 ஏக்கரில், கடந்த அக்டோபர் முதல் வாரத்தில் மிளகாய் விதைப்பு செய்யப்பட்டது.

காய் காய்க்கும் பருவத்தை எட்டிவிட்ட நிலையில் மழையின்றி வறட்சி நிலவியது. திருவாடானை தாலுகா மட்டுமின்றி, மாவட்டத்தில் ஆறு தாலுகா விவசாயிகளும், நெல் பயிர்போல் மிளகாய் செடிகளும் கருகி மகசூல் இழப்பு ஏற்படும் என்று கவலையடைந்தனர். இதை போக்கும் வகையில் சில நாட்களாக பெய்துவரும் சாரல் மழை, மகிழ்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஆர்.எஸ்.மங்கலம் விவசாயி பாண்டி, முருகன் கூறியதாவது: மிளகாய் காய்க்க துவங்கிவிட்ட நிலையில் கன மழை பெய்தால் தண்ணீர் தேங்கி செடிகள் அசைவு ஏற்பட்டு சோர்ந்துவிடும். அதிகம் தண்ணீர் தேவையில்லாத தோட்டக்கலை பயிர் என்பதால் இந்த சாரல் மழை, மிளகாய் செடிகளுக்கு மிகவும் ஏற்றதாக உள்ளது. குளிர்ந்த சீதோஷ்ணமும் மிகவும் ஏற்பதாக உள்ளதால் மிளகாய் காய்க்க துவங்கியுள்ளன, என்றனர்.

## சிவகங்கை சந்தையில் காய்கறிகள் விலை மலிவு

சிவகங்கை : பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, சிவகங்கை வாரச்சந்தையில் காய்கறிகள் மலிவான விலைக்கு விற்றன.

சிவகங்கை வாரச்சந்தைக்கு தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் இருந்தும், ஊட்டி , கொடைக்கானலில் இருந்தும் மலைக்காய்கறிகள் வரத்துள்ளன.

ஜன.,14 அன்று பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, நேற்று "பொங்கலுக்கான சந்தையாக இருந்ததால், மக்கள் கூட்டம் அதிகமாக காணப்பட்டது.

காய்கறி விலையும் மலிவாக இருந்ததால், மக்கள் ஆர்வத்துடன் வாங்கினர்.

விலை (ஒரு கிலோ ரூ.): சின்ன வெங்காயம் - 30,பெரிய வெங்காயம் - 20, வெண்டை- 20, கத்தரி- 20, தக்காளி- 15,பீன்ஸ்- 60, அவரை -20, கேரட் - 20, உருளை - 30, கருணை - 20, பீட்ரூட் - 20. சவ்சவ் - 10, முள்ளங்கி - 20, பச்சை பட்டாணி - 40, பாகற்காய் - 20, சோயா பீன்ஸ் - 80, ஜெர்மன் பீன்ஸ் - 40, மொச்சை - 40,முட்டை கோஸ் - 15க்கு விற்றன.

## பொங்கல் சீர் வரிசைக்கு பரங்கிக்காய் தட்டுப்பாடு

சிங்கம்புணரி : சிங்கம்புணரியில் பொங்கல் சீர்வரிசையில் இடம்பெறும் நாட்டுப்பரங்கிக்காய்க்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இப் பகுதியில் திருமணத்திற்கு பின் பெண்களுக்கு பிறந்த வீட்டிலிருந்து பொங்கல் சீர்வரிசை வழங்குவது வழக்கம்.

பொங்கலுக்கு தேவையான பச்சரிசி,வெல்லம், பொங்கல் பானை,கரும்புகட்டு, தேங்காய்,பழம் உட்பட பல்வேறு பொருட்களுடன், நாட்டுப்பரங்கிக்காயும் வைத்து வழங்கப்படும்.

இந்த ஆண்டு மழையில்லாமல் பரங்கி விளைச்சல் குறைந்து தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

சிங்கம்புணரி தினசரி மார்க்கெட்டிற்கு வரத்து இன்றி,வியாபாரிகள் கிராமங்களுக்கு சென்று வாங்கி வருகின்றனர்.

கடந்த ஆண்டு பொங்கலுக்கு பத்து கிலோ எடையுள்ள காய் ஒன்று ரூ.50க்கு கிடைத்தது. தற்போது, ரூ.130 முதல் 150 வரை விலை உள்ளது.

## ஆண்டிபட்டி அருகே நோய் தாக்கி 3 மாடுகள் பலி :மேலும் பரவாமல் தடுக்க ஆந்த்ராக்ஸ் தடுப்பூசி

ஆண்டிபட்டி : ஆண்டிபட்டி சக்கம்பட்டி அருகே மூன்று மாடுகள், இரண்டு ஆடுகள் நோய் தாக்கி பலியாகின. ஆந்த்ராக்ஸ் நோய் தாக்குதலாக இருக்கலாம் என கால்நடைதுறையினர் சந்தேகிக்கின்றனர்.

தேனி மாவட்டம் உத்தமபாளையம் அருகே கோகிலாபுத்தில் கடந்த 6 ம் தேதி சசிகுமார் என்பவருக்கு சொந்தமான 10 மாடுகள் திடீரென மயங்கி விழுந்து பலியாகின.

இந்த நிலையில் ஆண்டிபட்டி சக்கம்பட்டி காலனி பகுதியில் நூறுக்கும் மேற்பட்ட பால் மாடுகள், ஆடுகள் வளர்க்கப்படுகின்றன. நேற்று அழகுமலை என்பவர் தனது வீட்டில் வளர்த்த இரண்டு பசு மாடுகளுக்கு அதிகாலையில் தண்ணீர் விட்டு பால் எடுத்துள் ளார்.

காலை 6 மணிக்கு மீண்டும், தண்ணீர் குடித்த சிறிது நேரத்தில் இரண்டு மாடுகளும் அடுத்தடுத்து சுருண்டு விழுந்தது. சில நிமிடங்களில், துடிதுடித்த நிலையில் இரண்டு மாடுகளும் பலியாகிவிட்டது. அப்போது இறந்த மாட்டை முகர்ந்து பார்த்த ஆடுகள் இரண்டும், சுருண்டு விழுந்து சில நிமிடங்களில் துடிதுடித்து இறந்து விட்டது.

இந்த நிலையில், அதே பகுதியை சேர்ந்த மாரியப்பன் என்பவருக்கு சொந்தமான மேய்ச்சலுக்கு சென்று வந்த பசு மாடு நேற்று மதியம் 1 மணிக்கு வீடு திரும்பியது.

சிறிது நேரத்திலேயே அந்த மாடும் பலியானது.

ஆண்டிபட்டி கால்நடை துறை உதவி இயக்குனர் ஜெதீசன் தலைமையில் டாக்டர்கள் குழுவினர் இறந்த கால்நடைகளை மருத்தவ பரிசோதனை செய்தனர்.

கால்நடைகள் குடித்த குடிநீரை சோதனைக்கு எடுத்து சென்றுள்ளனர். மதுரையில் இருந்து கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவினர் வந்து ரத்த மாதிரிகளை சேகரித்தனர்.

கால்நடை துறை உதவி இயக்குனர் முருகேசன் கூறுகையில், ""மாடுகள் எவ்வகை நோய் தாக்கி இறந்தது என தற்போது உறுதியாக கூற முடியாது. இறந்த மாடுகளின் ரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டுள்ளது. முழுமையான பரிசோதனைக்கு பிறகு நோய் தாக்கம் குறித்து தெரிய வரும். இந்த நோய் மேலும் பரவாமல் தடுக்க மற்ற மாடுகளுக்கு ஆந்த்ராக்ஸ் நோய் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. கால்நடைகளை மேய்ச்சலுக்கு அனுப்பாமல் சில நாட்கள் வீட்டில் வைத்து பராமரிக்க வேண்டும்," என்றார்.

பருவமழை பொய்த்து விவசாயமும் குறைந்து விட்ட நேரத்தில், கால்நடைகளும் நோய் தாக்கி பலியாவது இந்த பகுதி விவசாயிகள் மத்தியில் பெரும் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

**மஹாராஷ்டிரா "மானிக்சம்' ரகத்திற்கு மாறும் தேனி மாவட்ட திராட்சை விவசாயிகள்**

சின்னமனூர் : தேனி மாவட்டம், ஓடைப்பட்டி பகுதியில், சீட்லெஸ் பச்சை திராட்சை விவசாயத்தில் விலை கிடைக்காமல், தொடர் நஷ்டமடைந்த விவசாயிகள், ஏற்றுமதி தரத்திற்கு திராட்சையை மாற்ற, வடமாநில "மானிக்சம்' ரகத்தை பயிரிட துவங்கியுள்ளனர்.

தேசிய அளவில் திராட்சை ரகத்தில், சீட்லெஸ் பச்சை திராட்சை குறிப்பிட்ட சில பகுதிகளில் மட்டுமே விளைகிறது. எப்போதும் மிதமான குளிர்ந்த காற்றுடன், வெப்பம் அதிகம் இல்லாத காலநிலை நிலவும் மலையடிவாரப் பகுதிகளில் மட்டுமே, இவ்வகை திராட்சை விளையும். மற்ற பயிர்களைப் போல் எந்த நிலத்திலும் இவ்வகை திராட்சை வளர்வதில்லை.

இதனால், மஹாராஷ்டிராவில் சங்கில், நாசிக், ஆந்திராவில் ஹைதராபாத், கர்நாடகாவில் பெல்காம், பெங்களூரு ஆகிய இடங்களில் மட்டுமே விளைகிறது. தமிழகத்தில், தேனி மாவட்டம் ஓடைப்பட்டி பகுதியில் மட்டுமே, இவ்வகை திராட்சை அதிகளவில் விளைகிறது. ஹைவேவிஸ் மலையடிவாரத்தில் அமைந்துள்ள ஓடைப்பட்டி, வெள்ளையம்மாள்புரம், தென்பழனி, மரிக்காடு பகுதிகளில் 600 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ளது.

ஆரம்ப காலத்திலிருந்து, இப்பகுதி விவசாயிகள், "தாம்ஸன் சீட்லெஸ்' என்ற வகையை பயிரிட்டு வருகின்றனர். சாதகமான சீதோஷ்ண நிலையை மட்டுமே சார்ந்துள்ள இவ்வகை திராட்சை, மழை, புயல், காற்று, அதிக வெயில் ஆகியவற்றை தாங்குவதில்லை. இதனால் அத்திபூத்தாற் போல, இத்திராட்சை விளைச்சலில் விவசாயிகளுக்கு "ஜாக்பாட்' அடிக்கும்.

பல வேளைகளில், விலை கிடைக்காமல், ஏற்றுமதி தரமில்லாததால் அதற்கும் முடியாமல், விரைவில் உதிர்ந்துபோய் விடுவதால், பெரும் நஷ்டத்தை சந்திக்கின்றனர்.இக்காரணங்களினால், தற்போது இத்திராட்சை விவசாயிகள், மஹாராஷ்டிராவில் இந்த பச்சை திராட்சை தோட்டங்களில் பயிரிடப்படும் "மானிக்சம்' என்ற, ரகத்திற்கு மாறி வருகின்றனர்.

பச்சை சீட்லெஸ் திராட்சையில், இது ஒரு ரகம். நிறத்தில் தின்மை, அதிக இனிப்பு சுவை, உதிராத தன்மை, வறட்சியை தாங்கும் திறன், உரம் மற்றும் செலவுகள் குறைவு, ஏற்றுமதி செய்யும் தரம், ஆகிய நன்மைகள் இந்த ரகத்தில் உள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர்.இந்த வகை திராட்சையின் விதைகள் ஒட்டு ரகமாக பதியமிட்டு வழங்கப்படுகிறது.

ஒரு ஏக்கருக்கு ஆயிரம் பதியங்கள் தேவைப்படுவதால், நேரடியாக மஹாராஷ்டிரா சென்று ஓடைப்பட்டி விவசாயிகள் வாங்கி வருகின்றனர். தற்போது கடந்த 6 மாதங்களாக இந்த வகை திராட்சைகளுக்கு மாறி வருகின்றனர்.

## சம்பா சிறப்பு தொகுப்பு திட்டம் 450 விவசாயிகளுக்கு மானியம்

வேதாரண்யம்: சம்பா சிறப்பு தொகுதி திட்டத்தின் கீழ், 450 விவசாயிகளுக்கு முழு மானியத்தில் நீர்ப்பாசன குழாய்களை, எம்.எல்.ஏ., காமராஜ் வழங்கினார்.

வேதாரண்யம் அருகே தலைஞாயிறு வேளாண்துறை அலுவலகத்தில், விவசாய துறை சார்பில் சம்பா சிறப்பு தொகுப்பு திட்டத்தின்கீழ், முழு மானியத்தில் நீர்ப்பாசன குழாய்கள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. இந்நிகழ்ச்சியில், உதவி இயக்குனர் ராஜேந்திரன் தலைமை வகித்தார். பஞ்., யூனியன் தலைவர் தமிழ்வாணன், துணைத்தலைவர் வாசுதேவன் முன்னிலை வகித்தனர். விவசாய அலுவலர் பிரதீப் வரவேற்றார்.

நிகழ்ச்சியில், 42 லட்சம் ரூபாய் மதிப்பில் விவசாயிகள், 450 பேருக்கு முழு மானியத்தில் நீர்ப்பாசன குழாய்களை எம்.எல்.ஏ., காமராஜ் வழங்கினார். இதில் தலைஞாயிறு ஒன்றிய அ .தி.மு.க., செயலாளர் பாலசுப்பிரமணியன், அ .தி.மு.க., டவுன் பஞ்., செயலாளர் சவுரிராஜன், முன்னாள் பஞ்., யூனியன் தலைவர்கள் ரமணி, காளிதாசன் உள்பட பலர் பங்கேற்றனர்.

## பருவம் தவறி பெய்யும் மழையால் பலனில்லை பயிர் இன்சூரன்ஸை எதிர்நோக்கும் விவசாயிகள்

பரமக்குடி, : பருவம் தவறி பெய்யும் மழையால் பயன் இல்லாத நிலையில் தமிழக அரசு பயிர் இன்சூரன்ஸ் தொகையை விரைவில் வழங்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர். ராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு லட்சத்து 30 ஆயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பளவில் நெல் விவசாயமும். சிறு தானியங்கள் 5 ஆயிரம் ஹெக்டேரிலும், பயறு வகைகள் 4 ஆயிரம் ஹெக்டேரிலும் விளைவிக்கப்படுகின்றன. எண்ணெய் வித்துக்கள் 6 ஆயிரத்து 700 ஹெக்டேரிலும், பருத்தி 2 ஆயிரத்து 400 ஹெக்டேரிலும் பயிர் செய்யப்படுகின்றன.
விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், நெல் உற்பத்தியை அதிகப்படுத்தவும், குறைந்த செலவில் அதிக மகசூல் எடுக்கவும், செம்மை நெல் சாகுபடி போன்ற புதிய முறையில் சாகுபடி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. புதிய தொழில் நுட்பத்தை அரசு அறிமுகப்படுத்தினாலும் போதிய அளவு மழைநீர் இல்லாததால் மாவட்டத்தில் விவசாயம் கேள்விக்குறியாகிவிட்டது. ஏற்கனவே இந்த ஆண்டு வைகையில் வந்த தண்ணீர் முறையாக பாசன கண்மாய்களுக்கு கிடைக்கவில்லை. மழை பற்றாக்குறையால் நீரின்றி விவசாயம் பாதித் தது. அனைத்து கண்மாய்களிலும் கூத்தன் கால்வாய் மூலம் தண்ணீர் திறந்துவிட அரசு நடவடிக்கை எடுக்ககோரி விவசாயிகள் கோரிக்கை வைத்தது குறிப்பிடத்தக்கது. ராமநாதபுர மாவட்டம் வறட்சி பகுதியாக மாறி வருவதால் விவசாய நிலங்கள் வீடுகள், கட்டிடங்கள் கட்ட விளைநிலங்களாக மாற்றப்படுகின்றன. இந்தவருடம் பருவ மழையை நம்பி விவசாயிகள் பலர் விவசாய பணியை தொடங்கினர். முறையான நேரத்தில் பருவமழை பெய்யாததால் பயிர்கள் அனைத்து கருகி விட்டன.
நேற்று காலை முதல் பரமக்குடி, அதனை சுற்றியுள்ள கிராம பகுதியில் மழை பெய்தது. ஏற்கனவே பயிர்கள் அனைத்தும் கருகிய நிலையில் பருவம் தப்பி பெய்யும் மழையால் பலன் இல்லையென விவசாயிகள் கூறினர். இதுகுறித்து விவசாயி ராக்கு கூறுகையில், மழையை நம்பியே இப்பகுதியில் விவசாயம் செய்யப்படுகிறது. இந்த வருடம் எதிர்பார்த்த மழை இல்லை. இதனால்

குறைந்த அளவே விவசாயம் நடந்தது. இருக்கின்ற பயிர்களை பாதுகாப்பதற்காக உரங்களை பயன்படுத்தினோம். இருப்பினும் பருவமழை ஏமாற்றி விட் டது. பயிர்கள் அனைத்தும் கருவி விட்டன. பரமக்குடி யை சுற்றிலும் உள்ள கிராமங்களில் நல்ல மழை பெய் தது. பயிர்கள் கருகி விட்ட தால் தற்போது மழை பெய் தும் பலன் கிடையாது. பயிர் இன்சூரன்ஸ் தொகை யை விரைவில் அரசு தர வேண்டும்,''என்றார்.

## விவசாயிகள் போராட்டம் எதிரொலி பச்சையாறு அணை இன்று திறப்பு

களக்காடு, : களக்காடு அருகே உள்ள கீழவடகரை பூலாங்குளம், பம்பன்குளம் குளம் மூலம் 300க்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. இந்த நிலங்களில் விவசாயிகள் வாழை மற்றும் நெல் பயிரிட்டுள்ளனர். பருவ மழை பொய்த்ததால் குளங்களில் தண்ணீர் இன்றி பயிர்கள் கருகும் நிலை ஏற்பட்டது.

இதனைதொடர்ந்து களக்காடு பச்சையாறு அணையில் இருந்து குளங்களுக்கு தண்ணீர் திறந்து விட வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

இதனை வலியுறுத்தி சாலை மறியல் போராட்டம் நடத்தவும் முயன்றனர். நாங்குநேரி தாசில்தார் வரதராஜன், டிஎஸ்பி கோவிந்தராஜ் மற்றும் அதிகாரிகள் விவசாயிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தி ஜன.9ம் தேதி அணை திறக்கப்படும் என உறுதி அளித்தனர். அதன்படி பச்சையாறு அணையிலிருந்து தண் ணீரை இன்று (9ம் தேதி) காலை 9 மணிக்கு கலெக்டர் சமயமூர்த்தி திறந்து வைக் கிறார்.

50 அடி கொள்ளளவு கொண்ட பச்சையாறு அணையில் தற்போது 21 அடி தண்ணீர் உள்ளது குறிப்பிடத்தக்கது.

## நெற்பயிரில் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த அரங்கனூர் கிராமத்தில் செயல் விளக்க முகாம்

புதுச்சேரி, : புதுச்சேரி அரசு வேளாண்துறை மூலம் சேலியமேடு, அரங்கனூர் கிராமத்தில் செம்மைநெல் சாகுபடி வயல்வெளி பள்ளி நடந்து வருகிறது. இந்த வயல்வெளி பள்ளியில் செம்மைநெல் சாகுபடியில் உள்ள தொழில்நுட்பங்கள் விவசாயிகளுக்கு செய்முறை விளக்கமாக 10 வாரங்களுக்கு அளிக்கப்படுகிறது.

இதன் ஒரு பகுதியாக நெல் பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை என்ற

தலைப்பில் நடந்த நிகழ்ச்சியில் முனைவர் விஜயகுமார் விளக்கம் அளித்தார்.
நிகழ்ச்சியின் போது சூடோமோனாஸ் பிடி, வேப்பஎண்ணை, ஒட்டுண்ணி அட்டை, டி வடிவ குச்சி இன கவர்ச்சி பொறி ஆகியவற்றின் மூலம் இயற்கை முறையில் நெற்பயிரில் தாக்கும் குருத்துபூச்சி, இலைசுருட்டுப்புழு மற்றும் அனைத்து பூச்சி நோய்களை கட்டுப்படுத்தப்படும் முறை குறித்து செய்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.
அமிர்த கரைசல், ஒரு கிலோ சாணத்துடன் ஒரு லிட்டர் கோமியம், 100 கிராம் கருப்பு வெல்லம் ஆகியவற்றை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு நாள் முழுவதும் ஊற வைக்க வேண்டும்.
பின்னர் 100 லிட்டர் தண்ணீரில் கலந்து நிலத்தில் விடலாம். அல்லது பயிரின் மேல் தெளிக்கலாம்.
பூச்சி விரட்டி, ஆடு, மாடு உண்ணாத இலைகளான நொச்சி இலை, ஆடா தோடா இலை, வேம்பு இலை, எருக்கன் இலை, ஆகியவற்றை எடுத்து நசுக்கி தண்ணீரில் ஊறவைத்து பின்பு தெளிப்பதன் மூலம் பயிர்களை தாக்கும் பூச்சிகளை விரட்டலாம்.
செம்மை நெல் வயல்வெளி பள்ளிகளில் வேளாண் வல்லுனர்களை அழைத்து மண்வள மேலாண்மை ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு, திறன்மிகு நுண்ணுயிர் கரைசல் தயாரித்தல் போன்றவை விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது.

### பருவமழைகள் பொய்த்தன தேவாரத்தில் ரூ.50 லட்சம் மானாவரி பயிர்கள் கருகின

தேவாரம், : தேவாரம் பகுதியில் பருவமழை பொய்த்துப்போனதால், மானாவாரி பயிர்கள் ரூ.50 லட்சம் வரை நஷ்டம் அடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.
தேவாரம் பகுதியில் உள்ள தே.மீனாட்சிபுரம், தே.சிந்தலைச்சேரி, தே.அழகர்நாயக்கன்பட்டி, தே.ஓவுலாபுரம், தே.மேட்டுப்பட்டி உள்ளிட்ட ஊர்களில் அதிகளவில் மானாவாரி, காட்டுச்சோளம், கம்பு, வெள்ளைச்சோளம், மக்காச் சோளம் போன்றவை பயிரிடப்படும்.
மழைபெய்யும் காலங்களில் செழித்து வளரும் இப்பயிர்களின் மூலம் பலநூறு ஏக்கரில் நிலங்கள் விவசாய செழிப்புமிக்க பகுதியாக இருக்கும். கடந்த 2010, மற்றும் 2011ம்ஆண்டுகளில் அதிகளவில் விவசாயப்பயிர்கள் விளைந்தன. இங்கு விளைந்த சோளத்தை திருச்சி, மதுரை உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து வியாபாரிகள் கொள்முதல் செய்தனர். உள்ளூரில் கறவைமாடுகள், மற்றும் பசுமாடுகளை வளர்ப்பவர்கள் தங்களுக்கு தட்டுப்பாடு இல்லாத தீவனங்கள் கிடைத்ததால் மகிழ்ச்சியடைந்தனர்.
இந்த ஆண்டு பருவமழைகள் பொய்த்துவிட்டன. இதனால் மானாவாரி பயிர்கள் விதைத்த பயிர்களும் கருகிவிட்டன. இதனால் இந்தப்பகுதியில் மட்டும் சுமார் ரூ.50 லட்சம் மதிப்பில்

நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். எனவே நிவாரணம் வழங்கிட தமிழகஅரசு முன்வருவது மிகவும் அவசியம்.

இதுகுறித்து தே.மேட்டுப்பட்டியைச்சேர்ந்த விவசாயி மகாலிங்கம் கூறுகையில், 'தேவாரம், சுற்றுப்புறத்தில் உள்ள தே.மேட் டுப்பட்டி, தே.மீனாட்சிபுரம் உள்ளிட்ட பகுதிகளில் மட்டும், இந்த ஆண்டு மானாவாரிபயிர்கள் பயிரிடப்படாததால் சுமார் 50 லட்சம் ரூபாய் வரை விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது. மழை இல்லாதது, பதினெட்டாம்கால்வாய் திட்டத்தில் தண்ணீர் திறக்கப்படாமல்போனது போன்றவற்றால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே தேவையான நிவாரணம் அளித்திட தமிழகஅரசு முன்வரவேண்டும்' என்றார்.

## பருவமழை பொய்த்ததால் மாற்றுத்தொழிலை?நாடும்?விவசாயிகள்

சிவகாசி,: வெம்பக்கோட்டை ஒன்றிய பகுதியில் கடந்த 3 ஆண்டுகளாக பருவமழை சரிவர பெயயாததால் விவசாய பணிகளில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. விவசாயிகள் மாற்றுத்தொழலை நாடி வருகின்றனர்.

வெம்பக்கோட்டை ஒன்றியத்தில் சுமார் 10 ஆயிரத்து 500 எக்டேர் பரப்பில் விவசாய நலங்கள் உள்ளன. இதில் 8 ஆயிரத்து 767 எக்டேரில் மானாவாரியாகவும, ஆயிரத்து 733 எக்டேரில் கிணற்று நீர்பாசனத்திலும் விவசாய பணிகள் நடக்கிறது. இப்பகுதியில் மானாவாரி நிலங்கள் அதிகம் உள்ளதால் பருவமழையை நம்பியே பெரும்பாலான விவசாயிகள் நடவு பணிகளை செய்து வருகின்றனர். இந்த ஒன்றியத்தில் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்புவரை ஆண்டுக்கு சராசரியாக 850 மி.மீ. மழை பெய்து வந்தது.

இதனால் விவசாய பணிகள் மும்முரமாக நடைபெற்றது. இந்நிலையில் கடந்த 3 ஆண்டுகளாக வெம்பக்கோட்டை ஒன்றியத்தில் பருவமழை சரிவர பெய்யவில்லை.

2010ம் ஆண்டு 610மி.மீட்டர் மழையும், 2011ம் ஆண்டு 619 மி.மீட்டர் மழையும் பெய்தது. 2012ல் 300 மி.மீட்டர் மட்டுமே மழை பெய்துள்ளது. பருவமழை பொய்த்ததால் இப்பகுதியில் விவசாய பணிகளில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. வெம்பக்கோட்டையில் 2009ம் ஆண்டில் 814 மி.மீட்டர் வரை மழை பெய்ததால், 8 ஆயிரத்து 400 எக்டேர் பரப்பில் நெல், மக்காசோளம், சூரியகாந்தி, சோளம், பருத்தி போன்ற பயர்களை விவசாயிகள் பயிரிட்டனர்.

ஆனால், 2010, 2011ம் ஆண்டுகளில் மழை சரிவர பெயயாததால் 5 ஆயிரத்து 900 எக்டேரில் மட்டுமே பாசன பணிகள் நடைபெற்றது. வெம்பக்கோட்டை அணை நீரை பயன்படுத்தி 8,100 ஏக்கர் பரப்பில் நெல்பாசன பணிகள நடக்கிறது. மழை இல்லாமல் கடந்த 3 ஆண்டுகளாக அணை

நிரம்பவில்லை.

நெல் பாசனத்திலும் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் இப்பகுதியில் விவசாயிகள் ஏராளமானோர் மாற்றுதொழலுக்கு சென்று விட்டனா. பாசன நிலங்கள் தரிசு நிலங்களாக மாறி வருகின்றன.

இதனால் வெம்பக்கோட்டை வட்டாரத்தில் சாகுபடி இலக்கை எட்ட முடியாமல் வேளாண்துறையினர் பரிதவித்து வருகின்றனர்.

இது குறித்து விவசாயி முத்துராஜ கூறுகையில், `தொடர்ந்து 3 ஆண்டுகளாக பருவமழை சரிவர பெய்யவில்லை. விவசாய பணியில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் பெரும்பாலான விவசாயிகள் பட்டாசு ஆலை பணிக்கு செல்கன்றனர் என்றார்.

### மேட்டூர் அணை நீர்மட்டம் 35 அடி



மேட்டூர்: மேட்டூர் அணையின் நீர் மட்டம் நேற்று 34.87 அடியாக இருந்தது. காவிரி நீர் பிடிப்பு பகுதிகளில் மழை இல்லாததால் மேட்டூர் அணைக்கு நீர் வரத்து ஆயிரம் கனஅடிக்கும் கீழ் குறைந்துள்ளது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி அணைக்கு வினாடிக்கு 701 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 1500 கனஅடி வீதம் நீர் திறக்கப்படுகிறது. நீர் மட்டம் 34.87 அடியாகவும், நீர் இருப்பு 9.60 டிஎம்சியாகவும் உள்ளது.

### நீரின்றி பயிர் கருகியது விவசாயி தற்கொலை



கீரனூர்: கருகிய பயிர்களை கண்டு விரக்தியில் விவசாயி விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார்.புதுக்கோட்டை மாவட் டம் கீரனூர் அருகே உள்ள நரியப்பட்டியை சேர்ந்தவர் முருகையா(50). இவர் தனக்கு சொந்தமான 5 ஏக்கரில் நெற்பயிர் சாகுபடி செய்திருந்தார். மழை சரிவர பெய்யாததால் கிணற்றில் போதிய அளவு தண்ணீர் இல்லை. பயிர்கள் கருகத் தொடங்கியது. இதற்காக அவர் சுமார் ஸீ50 ஆயிரம் செலவு செய்து போர் போட்டார்.பல நூறு அடி ஆழம் போர் போட்டும் தண்ணீர் இல்லை. ஏற்கனவே நெற்பயிர் சாகுபடிக்கு கடன் வாங்கி செலவு செய்துள்ள நிலையில், தற்போது போர் போட்டும் பலனில்லாதால் முருகையா விரக்தியில் இருந்தார்.மனம் உடைந்த நிலையில் காணப்பட்ட அவர் கடந்த 27ம் தேதி இவர் வீட்டில் இருந்த பூச்சி மருந்தை குடித்துவிட்டார். மயங்கி விழுந்த அவரை அக்கம் பக்கத்தினர் மீட்டு, கீரனூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர்.

பின்னர் அவர் திருச்சியில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவர் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை இறந்தார். இதுபற்றி போலீசார் விசாரித்து வருகின்றனர்.இதுவரை 12 பேர் பலி: சம்பா பயிர் கருகிய சோகத்தில் நாகை மாவட்டத்தில் கூரத்தாங்குடி ராஜாங்கம், கீழையூர் மகிழியை சேர்ந்த செல்வராஜ், நரிமணம் சாமியப்பன், வேதாரண்யம் அடுத்த கரியாப்பட்டினம் பிராந்தியங்கரை இடும்பையன் ஆகிய 4 பேர், திருவாரூர் மாவட்டத்தில் குடவாசல் அடுத்த அபிவிருத்தீஸ்வரம் ஸ்ரீதர், திருத்துறைப்பூண்டி அடுத்த ஆண்டாங்கரை அப்துல் ரஹீம், குடவாசல் கடம்பங்குடி சக்திவேல் என 3 பேர், புதுக்கோட்டை மாவட்டத்தில் கோட்டைப்பட்டினம் அடுத்த கரகத்திக்கோட்டை ரங்கசாமி, ஆவுடையார்கோவிலை அடுத்த வளத்தக்காடு கருப்பையா தேவர், அறந்தாங்கி அடுத்த கீழ்குடி அம்மன் ஜாக்கி கிராமத்தை சேர்ந்த சின்னையா, அறந்தாங்கி அடுத்த நாகுடி அருகே உள்ள பிராமணவயலை சேர்ந்த காளிமுத்து (55), கீரனூர் அருகே உள்ள நரியப்பட்டியை சேர்ந்த

முருகையா ஆகிய 5 பேர் என டெல்டா மாவட்டங்களில் இதுவரை 12 விவசாயிகள் பலியாகி உள்ளனர்.

### டெல்டாவில் கனமழை



தஞ்சை: தஞ்சை மாவட்டத்தில் விடிய விடிய பரவலாக மழை பெய்தது. தஞ்சையில் நேற்று வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. அவ்வப்போது லேசான மழை பெய்தது. கடலோர பகுதிகளில் கன மழை பெய்து வருவதால் நேற்று 1,500 மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை.மழையால் கருகியுள்ள பயிர்களுக்கு எந்தவித பயனும் இல்லை. அதேசமயம் கதிர் விடும் தருவாயில் உள்ள பயிர்களுக்கும், கதிர் வந்து பழுக்கும் நிலையில் இருக்கும் பயிர்களுக்கும் பயனுள்ளது என விவசாயிகள் தெரிவித்தனர்.நாகை மாவட்டம் வேதாரண்யத்தில் நேற்று முன்தினம் மாலை துவங்கி விடிய விடிய பலத்த மழை பெய்தது. அதிகபட்சமாக வேதாரண்யத்தில் 173.8 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. மானாவாரி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.திருவாரூர் மாவட்டத்தில் திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி, திருவாரூர், நீடாமங்கலம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்தது.இதேபோல் புதுக்கோட்டையில் விடிய விடிய பெய்தது. பள்ளிகளுக்கு மட்டும் விடுமுறை விடப்பட்டது.

### வங்கக் கடலில் காற்றழுத்தம் தென் மாவட்டங்களில் மழை



சென்னை: வங்கக் கடலில் இலங்கை அருகே வளி மண்டலத்தில் காற்று சுழற்சி ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக தென் மாவட்டங்களில் மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.வடகிழக்கு பருவ மழை முடிவுக்கு வந்துள்ள நிலையில், காலம் கடந்து இப்போது சில நேரங்களில் திடீர் மழை பெய்து வருகிறது. கடல் பகுதியில் வளி மண்டலத்தில் ஏற்படும் காற்று சுழற்சி இதுபோன்ற திடீர் மழை பொழிவுக்கு காரணமாக இருக்கின்றன. இது இயல்பு நிலைக்கு மாறாக எப்போதாவது காணப்படுவது. இந்நிலையில் கடந்த வாரம் ஒரு குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி தென் தமிழகத்தில் மழை பெய்தது. அது நீண்ட நாட்கள் நீடிக்கவில்லை. இதற்கிடையே காலை நேரங்களில் கடுமையான பனிப்பொழிவு தொடர்ந்து வந்தது. நேற்று முன்தினம் மாலை வங்கக் கடலில் தென் கிழக்கு பகுதியில் வளி மண்டலத்தில் காற்று சுழற்சி ஏற்பட்டது. இதனால் தென் மாவட்டங்களில் மழை பெய்தது.

அதில் அதிகபட்சமாக வேதாரண்யத்தில் 170 மிமீ, முத்துப்பேட்டை, பேராவூரணி, பட்டுக்கோட்டை 50மிமீ, மதுக்கூர், ஆலங்குடி, அதிராம்பட்டினம் 40 மிமீ, தேவக்கோட்டை, அறந்தாங்கி, ராமேஸ்வரம், திருத்துறைப்பூண்டி 30 மிமீ, பாம்பன், தொண்டி, கந்தர்வகோட்டை, ஒரத்தநாடு, காரைக்குடி, விளாத்திக்குளம், ஆர்.எஸ்.மங்கலம், சூரங்குடி, காரைக்கால், நன்னிலம், திருப்பத்தூர், கழுகுமலை 10 மிமீ மழை பெய்துள்ளது.வங்கக் கடலில் உருவான அந்த காற்று சுழற்சி குமரிக் கடல் பகுதியை நெருங்கியபோது, காற்றழுத்த தாழ்வு நிலையாக மாறியது.இதன் காரணமாக காவிரி டெல்டா பகுதியில் மழை பெய்யும். குறிப்பாக ராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, மதுரை, தேனி, திண்டுக்கல், விருதுநகர், ஆகிய மாவட்டங்களில் மழை பெய்யும். தமிழகத்தின் பிற மாவட்டங்களில் லேசான மழை பெய்யும்.

## ஆந்த்ராக்ஸ் பீதி தமிழக மாடுகளுக்கு கேரளாவில் தடை



கூடலூர்: தமிழகத்தில் மாடுகள் ஆந்த்ராக்ஸ் நோய் தாக்கி இறந்ததன் எதிரொலியாக, கேரளாவிற்கு மாடுகள் கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.இரண்டு நாளுக்கு முன்பு தேனி மாவட்டம் உத்தமபாளையம் அருகே கோகிலாபுரத்தில் 15 மாடுகள் திடீரென அடுத்தடுத்து இறந்தன. இதைதொடர்ந்து உத்தமபாளையம் கால்நடை துறையினர் மருத்துவ பரிசோதனை செய்ததில் ஆந்த்ராக்ஸ் நோய் தாக்கி இறந்தது தெரியவந்தது. இதையடுத்து நோய் பரவாமல் இருக்க 20 பேர் கெண்ட 7 மருத்துவ குழுக்கள் அமைக்கப்பட்டு சுற்றுப்புற கிராமங்களில் மாடுகளுக்கு தடுப்பூசி போட்டு வருகின்றனர்.வழக்கமாக தேனி மாவட்டத்திலிருந்து கேரள எல்லை பகுதியான இடுக்கி மாவட்டத்திற்கு இறைச்சிக்காக கால்நடைகள் கொண்டு செல்வது வழக்கம்.

ஆந்த்ராக்ஸ் தகவலறிந்த இடுக்கி மாவட்ட கலெக்டர் பாஸ்கரன், தமிழக பகுதியிலிருந்து மாடுகளை கொண்டு செல்ல தடை விதித்துள்ளார். மேலும் இடுக்கி மாவட்ட கால்நடை மருத்துவ இணை இயக்குநர் டாக்டர் பிரசாத் தலைமையில் 20 பேர்கொண்ட குழுவினரை நியமித்து, தமிழக எல்லையை ஒட்டியுள்ள கேரள பகுதியிலுள்ள கால்நடைகளுக்கு ஆந்த்ராக்ஸ் நோய் பரவாமலிருக்க தடுப்பூசிகளை போடுமாறு அறிவுறுத்தியுள்ளார்.இதனிடையே, ஆண்டிபட்டி அருகே அடுத்தடுத்து 3 மாடுகள், 2 ஆடுகள் மர்மநோயால் பலியாகியுள்ளன. இதனால் ஆந்த்ராக்ஸ் தாக்கியதால்தான் கால்நடைகள் இறந்து வருவதாக விவசாயிகள் பீதியடைந்துள்ளனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

10.01.2013 A.M

## தென்மாவட்டங்களில் இன்றும் மழை நீடிக்கும் வானிலை மையம் அறிவிப்பு

சென்னை

தென் மாவட்டங்களில் இன்றும் பல இடங்களில் மழை நீடிக்கும் என்றும் வேதராண்யத்தில் 17 செ.மீ.மழை கொட்டி உள்ளது என்றும் வானிலை அதிகாரி தெரிவித்தார்.தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை காலம் முடிந்து குளிர்கால மழை பெய்துவருகிறது. சென்னை வானிலை மைய அதிகாரி கூறியதாவது:–

இன்று மழை நீடிப்பு

இலங்கை அருகே வங்கக்கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை குமரிக்கடல் பகுதிக்கு நகர்ந்து உள்ளது. ஆனால் வலுவடையவில்லை.இதன்காரணமாக தமிழ்நாட்டில் தென் மாவட்டங்களில் இன்று (வியாழக்கிழமை) மழை நீடிக்கும். வடமாவட்டங்களில் ஒரு சில இடங்களில் மழைபெய்யும். சென்னை உள்பட சில வடமாவட்டங்களில் வறண்ட வானிலை நிலவும்.இவ்வாறு அந்த அதிகாரி தெரிவித்தார்.நேற்று காலை 8.30 மணியுடன் முடிந்த 24 மணிநேர மழை அளவு வருமாறு:–

17 செ.மீ.மழை

வேதாரண்யம் 17 செ.மீ., முத்துப்பேட்டை, பேராவூரணி, பட்டுக்கோட்டை தலா 5 செ.மீ., மடுக்கூர், ஆலங்குடி, அதிராம்பட்டினம் தலா 4 செ.மீ., புதுக்கோட்டை, தேவகோட்டை, அறந்தாங்கி, ராமேஸ்வரம், பெருங்கலூர், திருத்துறைப்பூண்டி தலா 3 செ.மீ., பாம்பன், தொண்டி, கந்தர்வகோட்டை, ஒரத்தநாடு, காரைக்குடி, தக்கலை தலா 2 செ.மீ., மானாமதுரை, நாகப்பட்டினம், சிவகங்கை, இளையான்குடி, விளாத்திக்குளம், ஆர்.எஸ்.மங்கலம், சூரங்குடி, காரைக்கால், நன்னிலம், திருப்பத்தூர், கழுகுமலை, திருமயம், மன்னார்குடி, திருவாரூர், அரிமளம், பாண்டவராயர் ஹெட் தலா 1 செ.மீ.மழை பெய்துள்ளது.

## **விவசாயிகளின் நஷ்டம் முழுவதையும் தமிழக அரசு ஈடுசெய்யும்: முதல்-அமைச்சர் ஜெயலலிதா**

நீலகிரி, -

விவசாயிகளின் நஷ்டம் முழுவதையும் தமிழக அரசு ஈடுசெய்யும். பொங்கல் திருநாளை தமிழக மக்கள் அனைவரும் மகிழ்ச்சியோடு கொண்டாட வேண்டும் என்று கோடநாட்டில் நடந்த விழாவில் பொங்கல் பரிசை பொதுமக்களுக்கு வழங்கி முதல்-அமைச்சர் ஜெயலலிதா பேசினார்.

சிறப்பு பொங்கல் பரிசு தொகுப்பு

தமிழக மக்கள் பொங்கல் பண்டிகையை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் வகையில் சுமார் 1 கோடியே 84 லட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.300 கோடி செலவில் ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் 100 ரூபாய் ரொக்கம் என சிறப்பு பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கப்படும் என்று முதல்-அமைச்சர் ஜெயலலிதா அறிவித்து இருந்தார்.இந்த சிறப்பு பொங்கல் பரிசு தொகுப்பு திட்டத்தின் தொடக்க விழா நீலகிரி மாவட்டம் கோடநாட்டில் உள்ள கோத்தகிரி கூட்டுறவு பண்டகசாலையின் நியாயவிலைக்கடையில் நேற்று மதியம் நடந்தது. விழாவுக்கு தமிழக அரசின் தலைமை செயலாளர் ஷீலா பாலகிருஷ்ணன் தலைமை தாங்கினார்.
இந்த திட்டத்தை தொடங்கி வைத்து பயனாளிகளுக்கு பொங்கல் பரிசுடன் இலவச வேட்டி மற்றும் சேலைகளையும் முதல்-அமைச்சர் ஜெயலலிதா வழங்கினார். பின்னர் விழாவில் அவர் பேசியதாவது:-

காவிரி நீர் கிடைக்கவில்லை

பொங்கல் நாள் நெருங்குகிறது, இன்றைய சூழ்நிலையில் தமிழக மக்களுக்கு எந்தவிதமான குறையும் இருக்கக்கூடாது என்பது தான் இந்த நிகழ்ச்சியின் நோக்கம்.
பருவமழை பொய்த்து விட்டது, ஆகவே காவிரி டெல்டா மாவட்டங்களில் உள்ள விவசாயிகளின் பயிர்கள் பிழைக்குமா, தப்புமா என்பது கேள்விக்குறியாகி உள்ளது. நமக்கு கிடைக்க வேண்டிய காவிரி நீரை கர்நாடக அரசு திறந்துவிடவில்லை, காவிரி நடுவர் மன்றத்தின் இறுதி தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிட வேண்டும் என்று எவ்வளவு வற்புறுத்தினாலும் இன்னும் மத்திய அரசு அதனை மத்திய அரசிதழில் வெளியிடவில்லை.

அமைச்சர் தலைமையில் குழு

அதனால் நமக்கு காவிரியில் கிடைக்க வேண்டிய உரிமை, காவிரி நீரில் நமக்கு கிடைக்க வேண்டிய பங்கு உறுதி செய்யப்படவில்லை. இருப்பினும் ஏற்கனவே டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு ஒரு நிவாரண தொகுப்பினை அறிவித்து இருக்கிறோம். அதன்படி, விவசாயப் பெருமக்களுக்கு என்ன நஷ்டம் ஏற்பட்டாலும் அது முழுவதையும் தமிழக அரசு ஈடு செய்யும் என்று ஏற்கெனவே உத்தரவாதம் அளித்து இருக்கிறோம்.
மேலும் எந்தந்த பகுதிகளில் வறட்சி பகுதிகளாக அறிவிக்க வேண்டும், இன்னும் எந்த அளவிற்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் என்பதை எல்லாம் முடிவு செய்யநிதித்துறை அமைச்சரின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த குழு தனது ஆய்வினை மேற்கொண்டு அறிக்கையை சமர்ப்பிக்கும் முன்பே பொங்கல் திருநாள் வந்துவிடும்.

மகிழ்ச்சியுடன் கொண்டாட ஏற்பாடு

இந்த பொங்கல் திருநாளை தமிழக மக்கள் அனைவரும் மகிழ்ச்சியோடு கொண்டாட வேண்டும் என்பதற்காகத்தான் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் பொருட்களை பெறுகின்ற 1 கோடியே 84 லட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் விழாவை முன்னிட்டு அவர்களுக்கு 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, 100 ரூபாய் ரொக்கம் ஆக மொத்தம் 160 ரூபாய் மதிப்புள்ள பொங்கல் பரிசுகள், விலையில்லா சேலையும்-வேட்டியும் வழங்கப்படுகிறது.
இதனால் எனது அன்பார்ந்த தமிழக மக்கள் அனைவரும் எந்த குறையும் இல்லாமல் மகிழ்ச்சியுடன் பொங்கலை கொண்டாட எனது தலைமையிலான அரசு இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருக்கிறது.  இன்றைய தினம் இந்த கோடநாட்டில் உள்ள ரேஷன் கடையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு இந்த பொங்கல் சிறப்பு தொகுப்பு வழங்கப்படுகிறது.

பொங்கல் வாழ்த்துக்கள்

அதே நேரத்தில் தமிழகம் முழுவதும் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் 1 கோடியே 84 லட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கும் இதே சிறப்பு பொங்கல் தொகுப்பு பரிசு அளிக்கப்படும். வருகின்ற 13-ந் தேதி ஞாயிற்றுக்கிழமையாக இருந்தாலும் கூட அன்றைய தினம் அனைத்து இடங்களிலும் நியாய விலைக் கடைகள் திறந்திருக்கும் என்பதை தெரிவித்துக் கொண்டு, தமிழக மக்கள் அனைவருக்கும் எனது இனிய புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.
இவ்வாறு முதல்-அமைச்சர் ஜெயலலிதா பேசினார்.அதைத்தொடர்ந்து மேடையில் 16 பேருக்கு பொங்கல் பரிசு பைகளை வழங்கினார். முன்னதாக பொங்கல் பரிசு தொகுப்பு திட்டம் குறித்து தமிழக கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை செயலாளர் எம்.பி.நிர்மலா விளக்கி பேசினார். முடிவில் நீலகிரி மாவட்ட கலெக்டர் அர்ச்சனா பட்நாயக் நன்றி

கூறினார்.அதைத்தொடர்ந்து விழா பந்தலில் அமர்ந்து இருந்த பயனாளிகளுக்கு அமைச்சர்கள் பொங்கல் பரிசு பைகளை வழங்கினார்கள்

## வடக்கு பச்சையாறு அணையில் தண்ணீர் திறப்பு 500 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்

களக்காடு

களக்காடு வடக்கு பச்சையாறு அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதன்மூலம் 500 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

<u>சாலை மறியல்</u>

களக்காடு வடக்கு பச்சையாறு அணையில் இருந்து விவசாய நிலங்களுக்கு தண்ணீர் திறந்து விடக் கோரி விவசாயிகள் மாவட்ட நிர்வாகத்துக்கு கோரிக்கை விடுத்து இருந்தனர். ஆனால் அதை அதிகாரிகள் ஏற்காமல் தண்ணீர் திறந்து விடாமல் இருந்தனர்.இதை கண்டித்து விவசாயிகள் கடந்த சில தினங்களுக்கு முன்பு சாலை மறியல் போராட்டம் நடத்தினார்கள். அப்போது, அதிகாரிகள் தலையிட்டு வடக்கு பச்சையாறு அணையில் இருந்து விரைவில் தண்ணீர் திறந்து விடப்படும் என்று தெரிவித்தனர்.

<u>தண்ணீர் திறப்பு</u>

இதையடுத்து நேற்று காலையில் வடக்கு பச்சையாறு அணையில் இருந்து தண்ணீர் திறந்து விட ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. காலை 9.30 மணிக்கு நெல்லை மாவட்ட கலெக்டர் சமயமூர்த்தி தலைமை தாங்கி அணையில் இருந்து தண்ணீரை திறந்து வைத்தார்.அணையில் இருந்து வினாடிக்கு 70 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இந்த தண்ணீர் நாங்குநேரியான் கால்வாய், பச்சையாறு கால்வாய், மடத்துக்கால்வாய் வழியாக விவசாய பாசனங்களுக்கு செல்கிறது. இதன் மூலம் 300 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும். இந்த தண்ணீர் மூலம் பத்மநேரி, வடகரை, களக்காடு, சூரங்குடி, கடம்போடு வாழ் உள்பட பல்வேறு கிராமங்களில் உள்ள விவசாய நிலங்கள் பயன்பெறும்.

<u>உதவி கலெக்டர்</u>

நிகழ்ச்சியில், சேரன்மாதேவி உதவி கலெக்டர் ரோகினி ராம்தாஸ், பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் ஜெகநாதன், நாங்குநேரி உதவி செயற்பொறியாளர் ஜவகர், உதவி பொறியாளர் ஆதிமூலம், நாங்குநேரி துணை போலீஸ் சூப்பிரண்டு கோவிந்தராஜன், வடக்கு

பச்சையாறு நீர்பாசன சங்க தலைவர் அய்யம் பெருமாள், மாவட்ட கவுன்சிலர் ராஜேந்திரன், ஒன்றிய செயலாளர் ஜெயராமன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## பருத்தி ஏற்றுமதி 60% சரிவடையும் அமெரிக்க அமைப்பு மதிப்பீடு

புதுடெல்லி

இந்தியாவின் பருத்தி ஏற்றுமதி (ஜூலை மாதத்துடன் நிறைவடையும் பருவத்தில்) 60 சதவீதம் சரிவடைந்து 57 லட்சம் பொதிகள் (ஒரு பொதி 170 கிலோ) என்ற அளவில் இருக்கும் என அமெரிக்க வேளாண் துறை மதிப்பீடு செய்துள்ளது. கடந்த சந்தை பருவத்தில் (2011 ஆகஸ்டு – 2012 ஜூலை) பருத்தி ஏற்றுமதி 1.47 கோடி பொதிகளாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச அளவில், பருத்தி ஏற்றுமதியில் நம் நாடு இரண்டாவது இடத்தில் இருந்து வருகிறது. இந்நிலையில் நடப்பு பருவத்தில் ஏற்றுமதி குறைய உள்ளதற்கான காரணம் எதையும் அமெரிக்க வேளாண் துறை சுட்டிக் காட்டவில்லை. நடப்பு பருவத்தில், டிசம்பர் வரையிலான ஐந்து மாதங்களில் 20 லட்சம் பருத்தி பொதிகள் ஏற்றுமதியாகியுள்ளன. நவம்பர், டிசம்பர் மாதங்களில் மட்டும் 16.50 லட்சம் பொதிகள் ஏற்றுமதியாகி உள்ளதாக தெரிகிறது. 2012 ஏப்ரல் மாதத்திற்கு பிறகு டிசம்பர் மாதத்தில் அதிகபட்சமாக 9.50 லட்சம் பொதிகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. வங்காளதேசம், வியட்நாம், பாகிஸ்தான் ஆகிய நாடுகள் நமது முக்கிய ஏற்றுமதி சந்தைகளாக உள்ளன.

நம் நாட்டில் பருத்தி சந்தை பருவம் என்பது அக்டோபரில் தொடங்கி செப்டம்பர் மாதம் நிறைவடைகிறது. இந்நிலையில் ஜூலை வரையிலான ஓர் ஆண்டில் இந்தியாவில் பருத்தி உற்பத்தி 3.25 கோடி பொதிகளாக இருக்கும் என அமெரிக்க அமைப்பு தெரிவித்துள்ளது. அதாவது முந்தைய மதிப்பீட்டில் மாற்றம் செய்யவில்லை.